விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## சங்குநாதம்

உலகளாவிய பொதிகள் சேவை
எமது யாழ்ப்பாணக் கிளைக்கு வருகை தரவும்
225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சிறப்பு தள்ளுபடிகள்
GTV Express Parcel.lk
011 4 654 444
அவுஸ்திரேலியா Rs.2100/=
ஜெர்மனி Rs.2000/=
இங்கிலாந்து Rs.1400/=
(5481)

சங்கு 26
ஒலி 318 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 17 ஞாயிற்றுக்கிழமை (02.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இயக்கச்சியில் வாகன விபத்து
### மூவர் படுகாயம்

(கிளிநொச்சி)

ஏ9 வீதி, இயக்கச்சியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாய மடைந்துள்ளனர்.

டிப்பர் வாகனமும் சிறிய ரக வான் ஒன்றும் மோதிய

23ஆம் பக்கம் பார்க்க

### செம்மணிப் புதைகுழி உட்பட
## பல்வேறு விடயங்களுக்கு நீதி கோரி யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்





23ஆம் பக்கம் பார்க்க



நவம்பர் மாத
## இராசி பலன்கள்
உள்ளே...

### இலங்கைக்குள் போதைப்பொருள் கடத்தல்
# 25 கடத்தல்காரர்கள் அடையாளம்

- பலர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்
- பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜேபால

(கொழும்பு)

இலங்கைக்கு போதைப்பொருளைக் கடத்தும் பிரதான 25 கடத்தல்காரர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

(03ஆம் பக்கம் பார்க்க)



### ஹெரோயினுடன் கைதானவர்
## நீதிமன்றம் அழைத்து சென்றவேளை தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

ஹெரோயினுடன் கைதான சந்தேக நபர் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்ற வேளை தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

கடந்த சில தினங்க

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழ், முஸ்லிம் நட்புறவை கட்டியெழுப்பல் தொடர்பில் யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையில் நட்புறவை கட்டியெழுப்பும் கலந்துரையாடல் நேற்றுச் சனிக்கிழமை யாழ்.தந்தை செல்வா கலையரங்கத்தில் வடக்கு-கிழக்கு

23ஆம் பக்கம் பார்க்க

### உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து
## வெளியேறும் சந்திரிகா



23ஆம் பக்கம் பார்க்க

## சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அநுர அரசாங்கம் தடுமாறுகிறது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட அநுர அரசாங்கம் தடுமாறுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாளிகாவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சட்டம் ஒழுங்கு உரிய



23ஆம் பக்கம் பார்க்க

### தமிழ்நாட்டில் நீரில் மூழ்கி
## இலங்கைப் பெண் உட்பட 4 பெண்கள் உயிரிழப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் நீரில் மூழ்கி இலங்கையைச் சேர்ந்த பெண் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் எண்ணூர் அருகே உள்ள கடலில், அலையில் அடித்துச் செல்லப்பட்ட 4 பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் 17 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும்

03ஆம் பக்கம் பார்க்க

### போதைப்பொருளுடன்
## யாழ்ப்பாணத்தில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில்போதைப் பொருளுடன் நேற்றுச் சனிக்கிழமை ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதைத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் விசேட

23ஆம் பக்கம் பார்க்க

### பருத்தித்துறை சுப்பர்மடத்தில்
## சுமார் 3 கோடி பெறுமதியான 100 கிலோ கஞ்சா மீட்பு
### பெண் உட்பட நால்வர் கைது



03ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நீதி காக்கும் உங்கள் நாளிதழ்

# எங்கள் வீட்டு தேவதைக்கு
# இன்று 39 வது பிறந்தநாளும்
# 335 வது நினைவு நாளும்
## என்றென்றும் நீங்காத நினைவுகளுடன்



## திருமதி ஜீவகாந்த் ரேவதி

மண்ணில்
1986.11.02

விண்ணில்
2024.12.03

அன்பின் உருவமாய்
எம்முடன் நீ வாழ்ந்த
நாட்களை எண்ணிப்
பார்க்கின்றோம் வேதனை
எம் நெஞ்சை முட்டுதம்மா!

உடுவில் வீதி,
மானிப்பாய்.

(5793)

**குடும்பத்தினர்**


# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

(5645)

T.P : 077 780 3970

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127



## வேலை வாய்ப்பு - உதவி நிர்வாக உத்தியோகத்தர்
## அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்
## காந்தி சிறுவர் அபிவிருத்தி நிலையம், உருத்திரபுரம், கிளிநொச்சி.

- இலங்கை அரசின் விருது பெற்ற சிறுவர் நிலையத்தில் பணியாற்ற ஓர் அரிய சந்தர்ப்பம்!
- இயற்கை வேளாண்மைக் கல்லூரி முகாமைத்துவம்
- காந்தியக் கொள்கைகளைப் பரப்பும் திட்ட முகாமைத்துவம்
- சங்கத்தின் நிர்வாகக் குழுவுடன் இணைந்து திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துதல்

பல்கலைக் கழக / விவசாயக் கல்லூரி / அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவன பட்டக் கல்வித் தகைமை வேண்டும்.
நிர்வாகப் பணியிலும் சிறுவர் பராமரிப்பிலும் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
உங்கள் சுய விபரக் கோவையைப் பின்வரும் முகவரிக்கு 16.11.2025 க்கு முன்னர் அனுப்புங்கள்.

செயலாளர், அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்,
உருத்திரபுரம், கிளிநொச்சி. தொலைபேசி 077 698 8691

(C-4238)



புதிய கல்வியாண்டு – 2026

## தரம் 6 கணிதம்

ஆசிரியர் திரு.T.அற்புதராஜா

புதிய பிரிவு ஆரம்பம் : திங்கட்கிழமை (03.11.2025) மாலை 5.00 மணி

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

192/20, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P - 0777 222 478

(5757)



## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் 1988 இல் பிறந்த பூரட்டாதி நட்சத்திரம், கிரக பாவம் - 17 ½, BSc பட்டதாரி ஆசிரிய மணமகனுக்கு அரச உத்தியோக மணமகள் தேவை.

077 154 7579
077 892 2440

(5772)



## பெண் தையலாளர் தேவை

கொடிகாமத்தில் இயங்கும் தையலகம் ஒன்றிற்கு வெட்டிய உடைகள் தைப்பதில் அனுபவமுள்ளவர் தொடர்பு கொள்ளவும்.

T.P : 076 931 8695

(1690)



## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி, கச்சேரிக்கு அண்மையாக, அரியாலை, கொழும்புத்துறை, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி பகுதிகளில் மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு சகல வசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை.தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

T.P : 077 557 3326

(5785)


ஓம் விராட் விஸ்வபிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



### கலைக்குரிசில், சிற்பரசன், சிற்பகலாவாரிதி, சிற்பகலாஜோதி,

## ஸ்தபதி நடராசா சற்குருநாதன்

### (குரு) ஆச்சாரியார்

திருநெல்வேலி பத்திரகாளிகோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநெல்வேலி திர்ஷிகா கலைக் கூடத்தின் நிறுவுனர் ஸ்தபதி நடராசா சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார் கடந்த வியாழனன்று (30.10.2025) சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் அமரர்களான திரு.திருமதி நடராசா - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் அமரர்களான திரு.திருமதி இரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர்.மங்கையற்கரசியின் (மங்கை) அன்புக் கணவரும், திர்ஷிகா, சரண்யா(பின்லாந்து), வர்க்கீசன், விதுர்சன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கருண்ராஜ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நிஷாந்தன் (பின்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் புவனேஸ்வரி (ஆனந்தி) சுந்தரமூர்த்தி(மூர்த்தி), சந்திராதேவி(கிளி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சுப்பிரமணியம், அமரர்.சண்முகராஜா, செந்தில் வதனி(வதனா), அமரர். கனகராஜா(ராஜி ஆட்ஸ்), கேதீஸ்வரன் (சின்னமணி), சரோஜினிதேவி, ஜெயசீலன், மகாலட்சுமி, மங்களேஸ்வரி, நித்தியானந்தன் (சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் புஸ்பராணி, தெய்வநாயகி, பாலேந்திரன், அமரர்.சூரிய குமார், சத்திய ஸ்ரீ (ஸ்ரீ மங்களா சிற்பாலயம்), அருட்செல்வி (ஆசிரியை யா/ திருக்குடும்ப கன்னியர்மடம் தே.ப) ஆகியோரின் அன்புச் சகலனும் லோசன், அபிநயா, அஸ்வின், அட்ஷயன், அஸ்மிதா, துவிஸ்தா, திகழ்யன், மஹதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (02.11.2025) பிற்பகல் 01 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு
ச.வர்க்கீசன் (மகன்)- 077 808 9782
த.விதுர்சன் (மகன்) - 077 801 0336
க. கருண்ராஜ் (மருமகன்) - 077 942 7543
ம. நிஷாந்தன் (மருமகன்)- +358 40 0265282 (பின்லாந்து)

(5796)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு

# சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தல்



**(கொழும்பு) ..............................**

**போதைப்பொருளை முற்றாக இல்லாதொழிப்பதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய வேலைத்திட்டத்தைப் பாராட்டும் அதேவேளை, இந் -நடவடிக்கைக்கு முன்னுரிமை அளித்து, நாட்டின் சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது.**

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் பாவனையை முடிவுக்குக்கொண்டு வரும் நோக்கில் அரசாங்கத்தினால் கடந்த வியாழக்கிழமை தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இவ் வேலைத்திட்டம் தொடர்பில் தமது வரவேற்பை வெளிப்படுத்தியுள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம், "பொலிஸ் சேவையில் உள்ள ஊழல் மலிந்த அதிகாரிகள் மற்றும் உயர்மட்ட அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு மற்றும் தலையீட்டின் காரணமாக போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதை நாம் பல வருடங்களாக அவதானித்து வருகிறோம்" என சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்விளைவாக பாடசாலைகளுக்கு உள்ளேயும் நாடளாவிய ரீதியிலும் போதைப்பொருள் பாவனை வியாபித்து, போதைப்பொருள் வர்த்தகத்தின் மத்திய நிலையமாக இலங்கை மாறியிருப்பதாகவும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் எனவும், அதற்கு சிவில் சமூகம் உள்ளடங்கலாக சகல தரப்பினரும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவ்வியக்கம் வலியுறுத்தியுள்ளது. (நி)

## வாடகை வாகனச் சேவைகள் தரவுகள் சேகரிப்பு ஆரம்பம்

(கொழும்பு)

வாடகை வாகனப் பயணச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கையில் முதற்கட்டமாக, தரவுகள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், நிலான் மிராண்டா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட 2025 ஆம் ஆண்டின் இலக்கம் 8 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திருத்தச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதன் மூலம், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள், பாடசாலை வாகனங்கள், அலுவலக போக்குவரத்து வாகனங்கள், சிறப்புச் சுற்றுலா வாகனங்கள், வாடகை வாகனங்கள் (உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் பற்றிய தகவல்கள்) ஆகியவற்றின் தகவல்களை சேகரிக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

### 25 கடத்தல்...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இலங்கைக்குள் போதைப் பொருட்களை கடத்தும் 25 பிரதான கடத்தல்காரர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாட்டுக்குள் போதைப் பொருள் கடத்தும் பிரதான நபர்களில் பலர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள்.

இந்தப் போதைப்பொருள் வர்த்தகர்களில் பலர் பாதாள உலகக் குழு உறுப்பினர்களுடன் தொடர்பு பேணுவது தெரியவந்துள்ளது.

இந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பில் பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்றார். (ம-7)

### சுமார் 3 கோடி...

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான சுமார் 100 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பெண் ஒருவர் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்களினால் போதை ஒழிப்புக்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செய்ற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் முதலாவது போதைப்பொருள் மீட்பு சம்பவமாக இது பதிவாகியுள்ளது.

சுப்பர்மடம் கடற்பகுதி ஊடாக கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் கடற்படையினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று (01) சனிக்கிழமை அதிகாலை சுப்பர்மடம் கடற்கரையில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சட்டவிரோதமாக கடல் வழியாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சா பொதிகள் வாகனம் மூலம் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன. இருந்த போதிலும் கடத்தலில் ஈடுபட்ட இருவர் படகுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் கடத்தலின் போது துணை புரிந்த மேலும் ஒரு படகு அடையாளம் காணப்பட்டு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. இரண்டு படகு வெளி இணைப்பு இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கு அமைவாக நடத்திய தேடுதலின் போது பருத்தித்துறைப் பகுதியில் உள்ள வீடென்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பைகளில் காணப்பட்ட 46 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. இதன்போது குறித்த வீட்டில் இருந்த பெண் ஒருவரும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ம-7,60,104)

### இலங்கை...

அலையில் அடித்துச்செல்லப்பட்ட பெண்களின் உடல்கள் அனைத்தும் அதே இடத்தில் கரையொதுங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிக்கும் தேவகி செல்வம் என்ற பெண்ணும் தமிழகத்தை சேர்ந்த ஏனைய மூன்று பெண்களுமே இவ் வாறு உயிரிழந்துள்ளனர்.


# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

Best Wishes

12.11.2025 இல் ஓய்வு பெற்ற
கோப்பாய் வடக்கு J/262 கிராம அலுவலர்

திரு. சுப்பிரமணியம் சண்முகவடிவேல்

அவர்களை 02.11.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு கோப்பாய் சித்திர வேலாயுதசுவாமி கோவில் திருமண மண்டபத்தில் அவர் பணி நயந்து பாராட்டி வாழ்த்துவதோடு அகவை அறுபதில் கால் பதிக்கும் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.




சேவை விபரம்

| | |
|---|---|
| கிராம அலுவலர் பயிற்சி நீர்வேலி கிராம அலுவலர் பிரிவு | - 01.07.1987 - 31.08.1987 |
| வரதராஜ்ரத்தை | - 01.09.1987 - 31.10.1990 |
| நீர்வேலி தெற்கு | - 01.11.1990 - 01.06.2012 |
| நீர்வேலி மேற்கு | - 02.06.2012 - 04.11.2018 |
| கோப்பாய் வடக்கு | - 05.11.2018 - 12.11.2025 வரை |

பதில் கடமை

| | |
|---|---|
| நீர்வேலி தெற்கு | - 15.03.1990 - 31.10.1990 |
| அச்செழு | - 01.02.1996 - 29.05.1996 |
| நீர்வேலி வடக்கு | - 01.10.1997 - 06.03.1998 |
| கோப்பாய் வடக்கு | - 01.11.2006 - 01.05.2012 |
| அச்செழு | - 02.05.2012 - 04.11.2018 |
| நீர்வேலி தெற்கு | - 05.11.2018 - 12.11.2025 |

விளம்பர அனுசரணை
Sri Murugan Jewellery
80/2, Kasthuriar Road, Jaffna.
Tel No- 021 222 5965
(5784)

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்
கோப்பாய் வடக்கு கிராம மக்களும், மணிவிழா குழுவினரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி சந்தியிலிருந்து 100m தூரத்தில்
ஆடியபாதம் வீதியில் 2 ம் ஒழுங்கையில் 1 ½
பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.

(5795)

**077 7590 799, 077 839 3896**

# கண்ணீர் அஞ்சலி



சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஸ்தாபகரும் சிறுவர்களே எமது நாட்டின் தேசிய சொத்து எனும் உன்னத சிந்தனையுடன் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது பணியாற்றிய சமூக செயற்பாட்டாளருமான

## அமரர் தம்பியப்பா பாலதயானந்தன்

அவர்களின் மறைவுச் செய்தி எங்களை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவர் சமூக நலனுக்காகவும், சிறுவர் வளர்ச்சிக்காகவும் செய்த பணிகள் எங்களுக்கெல்லாம் என்றென்றும் வழிகாட்டியாக இருக்கும்.
அவரின் அர்ப்பணிப்பு, அன்பு, மற்றும் தொண்டாற்றும் மனப்பாங்கு எங்கள் நினைவில் நிலைத்திருக்கும்.
இக்கடினமான நேரத்தில், அவரின் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (5794)

**சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் (CFCD)**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 04 - 1947 | 31 - 10 - 2025 |



## துரைசிங்கம் கமலாதேவி

(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

நாயன்மார்கட்டினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் கமலாதேவி அவர்கள் கடந்த (31.10.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் SK துரைசிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் வீடமைப்பு அதிகார சபை) அவர்களின் பாசமிகு மனைவியும் ரஞ்சிதராஜ் (சுவிஸ்), காலஞ்சென்ற யசிந்தராஜ் மற்றும் வினீஷ்ராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகம், முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும். கல்யாணி (சுவிஸ்). அனோஜா (ஆசிரியர் - மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற வைரமுத்து இராசமணி மற்றும் ஞானப்பெருமாள் பத்மாவதி (கரவெட்டி), அரியநாயகம் - சிறிதேவி, நடராஜா-புஸ்பராணி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற முருகேசு பராசக்தியின் அருமைமைத்துனியும், பிரீத்தி (சுவிஸ்), ஆருதி (சுவிஸ்), அஜய் (சுவிஸ்), திலோக்ஷணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 270, கனகரட்ணம் வீதி, நாயன்மார்கட்டில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (02.11.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல.270, கனகரட்ணம் வீதி,
நாயன்மார்கட்டு. (C-4239)

077 433 4846
021 222 6911

தகவல்:
குடும்பத்தினர்

# 21 ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

## அமரர் கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்
– ஊர்காவற்றுறை)



வித்தாகிப்போன விருட்சமொன்றின் காதை!!
கூட்டுக்குள் ஒன்றாய்
குதூகலித்த அந்நாட்கள்
நேற்று வரை வந்து போகிறது
நெஞ்சம் கனத்து!
காத்த அடைக்குஞ்சுகள்
கம்பீரமாய் நிமிர்ந்து நிற்க
சேர்த்து விட்டாய் பெருஞ்செல்வம்!
அழிவில்லை அதற்கு என்றும்,
மதங்களைக் கடந்து மானிடம்
நோக்கிய உன் பார்வையில்
உமார்கயாமும், ஓஷோவும்,
பட்டினத்தாரும் பரவசமாய்
உன் உதட்டில் உபதேசம்
அன்று செய்தாய்
இன்றெமக்கு சாசனமாய்.....
ஆண்டுகள் இருபத்தொன்று
ஆனபோதிலும் மறக்கப்பட்ட
மனிதர்கள் பலருள் மங்கா
புகழுடைய மனிதனாய்
என்றும் வாழ்வாய்!

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10.05.1946 | 02.11.2004 |

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. (5797)

நீங்கா நினைவுடன்....
நின் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 25 - 01 - 1938 | 01 - 11 - 2025 |



## அம்பலம் சிவானந்தன்

(ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியரும் முன்னைநாள் சர்வதேச கெயர் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தரும்)

அளவெட்டி வடக்கு செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும் கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலம் சிவானந்தன் அவர்கள் நேற்று (01.11.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம் - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புவனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் சிவறஞ்சன், சிவாஜினி, சிவரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி, பகீரதன், கஜபதி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரோஜன், அனோஜன், சுவர்ணா, சரண்யா, சின்மயன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, விசாகம்மா, சண்முகசுந்தரம் மற்றும் விசுவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2025) திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் கருவப்புலம் 5ம் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் - 072 230 5987
பெறாமகன் - 077 759 4962
மருமகள் - 077 739 6200 (5798)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் அமைச்சர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

வத்திக்கான் வெளிவிவகார அமைச்சரான பேராயர் பால் ரிச்சர்ட் கல்லாகர், நாளை இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் மோதலுக்குப் பின்னரான நல்லிணக்கத்திற்கு ஆதரவளிப்பதில் திருச்சபையின் தொடர்ச்சியான ஈடுபாட்டை இந்த விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத்தின் அழைப்பின் பேரில் இந்த விஜயம் இடம்பெறுகிறது.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 50 ஆவது ஆண்டு நிறைவுடன் இந்த விஜயம் அமைந்துள்ளது.

தங்கியிருக்கும் காலத்தில் பேராயர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பகிரப்பட்ட மனிதாபிமான முன்னுரிமைகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட தேவாலயங்கள் உட்பட நாடு முழுவதும் உள்ள பல மத மற்றும் கலாசார தளங்களுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# நெரிசலான இடங்களில் பயணிக்கும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

பொது போக்குவரத்து மற்றும் நெரிசலான இடங்களில் பயணிக்கும் போது, பொதுமக்கள் தமது உடமைகள் குறித்து அவதானமாக செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சன நெரிசலைப் பயன்படுத்தி, குற்றவாளிகள் உடமைகளை திருடுவதற்கு முயற்சிக்கலாம் என்ற சந்தேகத்திலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பொது இடங்களில் மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் முறை குறித்து அறிக்கை ஒன்றையும் பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ளது.

அத்துடன் திருட்டு அல்லது அதற்கான முயற்சி எடுக்கப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறும் அல்லது 119 என்ற பொலிஸாரின் அவசர அழைப்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# பேருந்து கட்டணங்களில் மாற்றமில்லை-கெமுனு விஜேரத்ன

(கொழும்பு)

எரிபொருள் விலையில் மாற்றங்கள் ஏற்பட்டதை அடுத்து பேருந்து கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என அகில இலங்கை தனியார் பேருந்துகள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தற்போது, நடைமுறையில் உள்ள கட்டணங்களுக்கமைய பேருந்து கட்டணங்கள் அறவிடப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முச்சக்கர வண்டி கட்டணங்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என அகில இலங்கை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வவுனியா மாவட்டத்தில் இரண்டு ஆற்றுச்சருக்கைகள் திறப்பு



(யாழ்ப்பாணம்)

மழை காலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்பட்ட வவுனியா மாவட்டத்தின் பிரமனாலன்குளம் - பரப்புக்கடந்தான் வீதியில், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக அமைக்கப்பட்ட இரண்டு ஆற்றுச்சருக்கைகளை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று சனிக்கிழமை மக்கள் பாவனைக்கு கையளித்தார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில், ரூ. 45.49 மில்லியனில் இந்த இரண்டு ஆற்றுச்சருக்கைகளும் முழுமையாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா மாவட்ட அலுவலகத்தின் மேற்பார்வையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

90 மீற்றர் நீளம், 4 அடி விட்டமுடைய 12 கற்காரைக் குழாய்கள் கொண்டமைந்த ஆற்றுச்சருக்கை 29.63 மில்லியன் ரூபாவிலும், 100 மீற்றர் நீளம், 3 அடி விட்டமுடைய 5 கற்காரைக் குழாய்கள் கொண்டமைந்த ஆற்றுச்சருக்கை 15.86 மில்லியன் ரூபாவிலுமாக இருவேறு ஒப்பந்தகாரர்கள் ஊடாக உரிய காலப் பகுதியினுள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் திருமதி வி.அபிராமி, வவுனியா மாவட்ட பிரதம பொறியியலாளர் கே.கௌசிகன், நிறைவேற்று பொறியியலாளர் வவுனியா மற்றும் மன்னார், தொழில்நுட்ப உத்தியோகத்தர், கிராம அலுவலர், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (8)

# ஊழியர் சேமலாப நிதிய சட்டம் திருத்தம் செய்ய அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்தம் செய்ய தொழிலாளர் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களின் வசதிக்காகவும் மற்றும் அதிக பலன்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலும் இந்த மாற்றம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் தொழிலாளர் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில், முக்கிய சில விடயங்களைத் திருத்த முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில்,

அபராதம் மற்றும் அபராதம் அறவிடும் பொறிமுறையை மேலும் வினைத்திறன்மிக்க நிலைக்குக் கொண்டு வருதல்.

வர்த்தக வங்கிகளுக்குப் பதிலாக, ஊழியர் சேமலாப நிதியம் ஊடாக அதன் உறுப்பினர்களுக்குக் கடனுதவி வசதிகளை வழங்குதல்.

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பில் தற்போதுள்ள சமத்துவமின்மையை நீக்குதல். போன்ற விடங்களில் மாற்றம் கொண்டுவரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் தொழிலாளர் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனம், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். (நி)

# இலங்கை வைத்தியர்களை நாடு திரும்பக் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் உள்ள விசேட வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையைச் சுட்டிக் காட்டி, பிரித்தானியாவுக்கு சென்ற இலங்கை வைத்தியர்களைத் தாய்நாட்டுக்கு திரும்புவது தொடர்பில் பரிசீலிக்குமாறு சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மேற்கொண்ட பிரித்தானியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இந்தக் கோரிக்கையை விடுத்ததாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சமூக வலைத்தள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கை உயர்ஸ்தானிகரகத்தால் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இலங்கை வைத்தியர்களுடன் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு கூட்டத்தில் தான் கலந்து கொண்டதாகவும், அப்போது இந்தக் கோரிக்கையை விடுத்ததாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் இலங்கைக்குத் திரும்பிப் பணியாற்றினால், அவர்களின் அனைத்து முந்தைய சேவைப் பலன்களுடன் சேர்த்து அதே பதவிகளில் மீண்டும் நியமிக்கப்படுவார்கள் என்று உறுதியளித்துள்ளார். (நி)


கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரியின்
94 ஆம் அணியைச் சேர்ந்த
திரு. இ.விமலன் அவர்களின்
அன்பு மாமியார்



திருமதி. காந்திமதி யோகநாதன் (ஆச்சி)

அவர்கள் இறைபதம் அடைந்த
செய்தி கேட்டு ஆழ்ந்த
துயரடைவதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

கொக்குவில் இந்துக் கல்லூரி
1994 ஆம் உயர்தர மாணவர்கள் கொக்குவில்

(C4237)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்போக்குவரத்தில் பயணிகளை மரியாதையுடன் நடத்துங்கள்

## வடக்கு மாகாண குடிசார் அமைப்புக்களின் சம்மேளனம்

(சாவகச்சேரி)

**பொதுப்போக்குவரத்தின் போது பயணிகளை சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மரியாதையாக நடத்த வேண்டும் என வடக்கு மாகாண குடிசார் அமைப்புக்களின் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

அண்மையில் கைதடியில் அமைந்துள்ள மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையோடு இடம்பெற்ற மாகாண மட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடலின் போதே மேற்படி கோரிக்கையை இ.போ.ச மற்றும் தனியார் போக்குவரத்துச் சபைகளின் வடபிராந்திய பொறுப்பாளர்களிடம் முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத்தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் பொதுப்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்ற அரச மற்றும் தனியார் பேருந்துகளின் ஒரு சில சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பயணிகளை மரியாதையுடன் நடத்துவதில்லை.

சிறுவர்கள், முதியோர்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என எவரையுமே மதிக்காத நிலைமை தான் அதிகமாக காணப்படுகின்றது. மிக மோசமான முறையில் பயணிகள் நடத்தப்படுகின்றனர்.

எனவே பயணிகளை எப்படி கண்ணியமாக நடத்த வேண்டும் என்பது தொடர்பில் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு பயிற்சி வழங்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த இ.போ.ச மற்றும் தனியார் பேருந்து சேவைகளில் ஈடுபடுகின்ற வடமாகாணத்திற்கு பொறுப்பான அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், பயணிகளை உரிய முறையில் நடத்துமாறு பேருந்து உரிமையாளர்களுக்கு தெரிவித்து வருகிறோம்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதமாக நடந்து கொள்கின்ற சாரதிகள் மற்றும் நடத்துநர்களை பணியில் இருந்து நீக்கி வருகிறோம்.

அதேநேரம் பேருந்துகளின் தரம் தொடர்பிலும் தற்போது கவனம் செலுத்தப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களை அரச மற்றும் தனியார் பேருந்துகள் இரண்டுமே ஏற்ற வேண்டும் என பணித்திருக்கின்றோம்.

தற்போது பொதுப்போக்குவரத்தில் பயணிகளுடைய நலன் தொடர்பிலும், சாரதி மற்றும் நடத்துநர்களின் நடத்தை தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. பொது மக்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் ஆதாரத்துடன் முறையிட முடியும். அதற்கான வட்சப் இலக்கங்களை தனியார் மற்றும் அரச பேருந்துச் சபைகள் அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் இதன்போது தெரிவித்திருந்தனர். (8-30)

# வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மணல் அகழ்வு உயிராபத்து ஏற்படும் அபாயம்!

## பிரதேச மக்கள் தெரிவிப்பு



(தருமபுரம்)

வடமராட்சி கிழக்கு பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதிகளான தாழையடி கடல் நீரை நன்னீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள பகுதி, குடாரப்பு பகுதி, செம்பியன் பற்று வடக்கு தெற்கு பகுதி, வனப்பிரதேச பகுதி போன்ற இடங்களில் தற்போது பாரியளவு சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றன.

இச் சட்ட விரோதமான மண்ல் அகழ்வானது பகல் நேரத்தில் குடாரப்பு பகுதியிலும் இரவு நேரங்களில் ஏனைய பகுதிகளிலும் இடம்பெற்று வருவதாக தெரிய வந்துள்ளது.

தற்போது குறிப்பிட்ட மணல் அகழ்வு இடம்பெறும் இடங்கள் பாரியளவு நீர் தேக்கங்கள் போல காட்சி அழிப்பதாகவும் மழை காலம் என்பதால் பாரியளவு உயிராபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன.

எனவே குறித்த இடங்களில் நீர்த்தேக்கங்களை சமப்படுத்தும் நடவடிக்கைகளை செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 300 |
| தக்காளி | 200 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 280 | 120 |
| கோவா | 200 | 180 | 200 | 200 |
| கரட் | 160 | 250 | 250 | 250 |
| பூசணி | 60 | 60 | 100 | 100 |
| புடோல் | 200 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 150 | 180 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 200 | 250 | 300 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 250 |
| பீற்றூட் | 100 | 120 | 200 | 150 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 200 | 500 | 250 | 400 |
| போஞ்சி | 600 | 550 | 600 | 600 |
| கத்திதம்புள்ள | 280 | 180 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 80-140 | 150 | 120 |
| தேசிக்காய் | 1600 | 1800 | 1600 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 900 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 450 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 250 |

# கடல்வளத்தினை பாதுகாக்குமாறு மீனவர்கள் ஆர்ப்பாட்டம்




(நெளுக்குளம்)

'ஏற்றுக்கொள்ளப்பட்ட மீனவப் பிரச்சினைகளின் தீர்வை முன்னோக்கிய மீனவ மாநாடு' வட மாகாண கடற்றொழிலாளர் இணையம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு நகரில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் செயற்பாடுகள் உள்ளிட்ட மீனவ மக்களுக்கு பாதகமான விடயங்களை கட்டுப்படுத்தி பாரம்பரிய கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பதுடன், கடல் வளத்தினையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று வட மாகாண மீனவ மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 'ஏற்றுக் கொள்ளப்பட்ட மீனவப் பிரச்சினை களின் தீர்வை முன்னோக்கிய மீனவ மாநாடு' ஆரம்பமானது.

குறித்த மாநாட்டில் கடற்றொழிலாளர்களின் நலன்சார்ந்தும், கடல் வளத்தினைப் பாதுகாப்பது சார்ந்தும் 'முல்லை பிரகடனம்' என்ற பெயரிலான பிரகடனம் ஒன்று முன்மொழியப்பட்டது.

அத்தோடு குறித்த பிரகடனம் நிகழ்வில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட விருந்தினர்களிடமும் கையளிக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் மாநாட்டில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வடக்கு மாகாண் கடற்றொழிலாளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 517
02.11.2025


# ஒழியுமா போதை ஒளிருமா இலங்கை?



அபிமன்யு

அன்றாடம் நாம் பத்திரிகைகளில் படித்தும், வானொலி, தொலைக்காட்சியில் அறிந்திருந்ததுமான செய்திகள் இப்போது எம் அயலில் நடக்கின்றது என்பது ஒவ்வொருவருக்கும் கிலியை ஏற்படுத்தியுள்ளது என்பதே மெய்.

நாம் யாரை மிகவும் அமைதியான, அடுத்தவருக்கு மரியாதை தருகின்ற மென்மையான சுபாவம் கொண்ட இளைஞன் என அடையாளம் கண்டோமோ அவனே போதைக்கு அடிமையாகி அது இல்லாமல் வாழமுடியாத நிலையில் உள்ளான் என்பதைக் கண் முன் பார்க்கும்போது ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய், தந்தையர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றார்கள் என்பது அபத்தமாயினும் அதுவே உண்மை.

> “போதைப்பொருள் இந்த நாட்டை அச்சுறுத்தும் பயங்கரவாதியாக உள்ளதை நாம் இன்று உணர்ந்து கொண்டிருக்கின்றோம். அந்தளவிற்கு போதை இளைஞர் சமூதாயத்தைக் கட்டிப்போட்டு இருக்கிறது என்றே கூறவேண்டும்.”

சாதாரணமாக வெற்றிலை பாக்கு மெல்லுவதைக்கூட நல்ல பழக்கம் இல்லை எனப் பிள்ளைகளைக் கண்டிக்கும் எமது சமூகத்துக்குள் போதை எவ்வாறு புகுந்தது என்ற பகுப்பாய்வைச் செய்யாமல் இருப்பது தவறு.

பெரும்பாலும் நாம் விடும் தவறு எது தெரியுமா? எமது பிள்ளை தவறு செய்யாது என்ற அதீத நம்பிக்கையே. அந்த நம்பிக்கையை பிள்ளை உணர்ந்திருந்தாலும் பிள்ளையின் நட்பு வட்டம் ஏதோவொரு வகையில் எமது பிள்ளையையும் அதன்பால் ஈர்த்துவிடும் என்ற புரிதல் நம்மிடம் இல்லாது போனது வேதனைக்குரியது.

பிள்ளைகளில் பெற்றோர் நம்பிக்கை வைப்பது தவறல்ல. ஆயினும் அந்த நம்பிக்கை குருட்டுத்தனமான நம்பிக்கையாக இருக்குமாயின் எமது பிள்ளை தவறான வழியில் செல்ல நாமே காரணமாகி விடுவோம்.

தற்போது பாடசாலைக் கல்வியைவிட தனியார் கல்வி நிலையங்களை நோக்கி நாம் படையெடுக்கத் தொடங்கியிருப்பது இவ்வாறான நிலைக்குக் காரணம் என்பதை மறுக்கமுடியாது.

பாடசாலை - வீடு என்ற நிலையை மாற்றி பாடசாலை, தனியார் வகுப்பு, வீடு எனும் தொடருக்குள் பிள்ளைகளைத் திணிக்கும்போது பிள்ளைகள் மிகுந்த மனச்சோர்வுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் போதை என்றே தெரியாமல் சோர்வைப் போக்கும் பொருளாக எடுத்துக்கொள்ளப்படும் போதை எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை சூனியமாக்கி விடுகிறது.

பிள்ளைகளின் மீது பெற்றோர்களின் அவதானிப்பு மேலோங்காத நிலை; இன்னும் பிள்ளைகளை இருளுக்குள் தள்ளிவிடும்.

மாணவர்கள், சாதாரண கூலி வேலை செய்யும் இளைஞர் சமூகத்தின் கைகளுக்குள் உயிர் கொல்லி போதைவஸ்து எவ்வாறு வருகிறது என்ற கேள்வியைக் கேட்காமல் இருப்போமாயின் எம் எதிர்காலச் சமூகம் சிதைவுற்றுப் போகும்.

துரதிஷ்டம் போதை வியாபாரிகள் கடந்தகால ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், பாதுகாப்புத் துறையினர் ஆகியோரின் நிழலில் இருந்து தமது போதை வியாபாரத்தை மேற்கொண்டு வந்தனர் என்ற செய்தி தலையில் இடியாய் இறங்கியிருக்கிறது.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் எனக் கூட்டம் போட்டுப் பேச்சுப் பேசியவர்கள் எதிர்கால தலைவர்களான சிறுவர்களுக்கு போதை விநியோகித்தவர்களை ஆசீர்வதித்தனர் என்பது எவ்வளவு கேவலமான செயல்.

இவ்வாறான நிலையிலேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் போதைக்கு எதிராக தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

போதைவஸ்தையும் பாதாள உலகக் குழுவையும் ஒழிக்கும் வரை நான் ஓயமாட்டேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறியிருப்பதை இப்போது செயற்படுத்திக் கொண்டிருப்பது புலனாகிறது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் “முழு நாடுமே ஒன்றாக” எனும் தொனிப்பொருளில் போதைக்கு எதிரான செயற்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த செயற்திட்டத்திற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தமையினை அங்கு கூடிய மக்கள் வெள்ளத்தை வைத்துக் கணிக்கக் கூடியதாக இருந்ததுடன் நாட்டின் பல முன்னணிப் பிரமுகர்களும் குறித்த செயற்திட்டத்தை ஆதரித்து அங்கு பிரசன்னமாகியிருந்ததுடன், போதை ஒழிப்புச் செயற்திட்டத்திற்கு நாடு முழுவதும் ஒன்றிணைய வேண்டும் எனக் கருத்தையும் வழங்கியிருந்தனர். இதில் இலங்கைக் கிரிக்கெட்டின் முன்னாள் வீரர்களான சனத் ஜெயசூரிய, குமார சங்ககார ஆகியோர் பங்குபற்றி குறித்த செயற்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பல்வேறு விடயங்களைத் தெரிவித்து நீண்ட உரையினை ஆற்றியிருந்தார். அவரின் உரையில், “நாட்டில் போதைப்பொருள் பரவல் என்பது தேசிய பேரழிவாக மாறியுள்ளது. பல குற்றச் செயல்கள் போதைப்பொருட்களை மையப்படுத்தியே நடைபெற்று வருகின்றன. போதைப்பொருள் எமது நாட்டிலிருந்து இல்லாதொழிக்கும் செயற்திட்டத்தில் நாம் ஒன்றிணைந்திருக்கின்றோம்.

இந்தப் பயணத்தில் எமக்கு இரு பாதைகள் உள்ளன. முதலாவது, முன்னைய அரசாங்கங்கள் போல போதைக்கு இடமளித்துக் கொண்டு அதைக் கண்டும் காணாமலும் விடுவது.

இரண்டாவது, அதற்கு எதிராகப் போராடுவது. நானும் எனது அரசாங்கமும் இந்தப் பேரழிவை எதிர்த்துப் போராடுவதற்கு முடிவு செய்துள்ளோம்.

நாட்டில் 64 விகித குற்றச் செயல்கள் போதை தொடர்பிலேயே நடைபெறுகின்றன. ஒரு கிலோ போதைப்பொருளின் விலை இரண்டு கோடிக்கும் அதிகம் எனில் இந்த வலையமைப்பின் வீரியம் எப்படிப்பட்டது.

எம் எதிர்காலச் சந்ததியை அழிக்கும் போதை வியாபாரிகளையும் அதன் முகவர்களையும் முற்றாக அழிக்கும் வரை இந்த அரசாங்கம் ஓயாது” என சூழுரைத்துள்ளார்.

குறித்த நிகழ்வில் அதிகமான பெற்றோர்கள் கலந்துகொண்டதுடன் எமது பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக இந்தச் செயற்திட்டத்தில் நாமும் இணைந்து கொள்கின்றோம் என்ற பதாகைகளையும் தாங்கி நின்றனர். போதை என்ற அரக்கன் எங்கோ ஓரிடத்தில் இருப்பதான செய்திகளைக் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் இன்று வெள்ளை ஆடை அணிந்தபடி எம் வீடுகளுக்குள்ளேயே அந்த அரக்கன் வரத் தொடங்கிவிட்டான்.

இனியும் நாம் விழிக்காமல் இருப்போமாக இருந்தால் அது எமது இனத்துக்கு மட்டுமல்ல முழு இலங்கையின் எதிர்காலத்தையும் சூனியமாக்கிவிடும்.

இந்த நேரத்தில் நாம் செய்யக் கூடியவை எதுவெனில்? எமது பிள்ளைகளின் செயற்பாடுகள், அவர்களின் நடத்தைகள், அவர்களின் நட்பு வட்டாரங்கள், அந்த நட்பு வட்டாரத்தின் பின்னணி போன்றவற்றை உன்னிப்பாக அவதானிப்பதுடன் பிள்ளைகளுடன் அவர்களின் நிறை - குறைகளைக் கேட்டறிய நேரத்தை ஒதுக்க வேண்டும்.

நாம் பணம் பணம் என்று காலில் சக்கரத்தைக் கட்டி ஓடுவது எமது பிள்ளைகளின் எதிர்காலத்துக்கானது எனின், பிள்ளைகளின் எதிர்காலம் சூனியமான பின்னர் எம்மிடம் பணம் இருந்து பயன் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

**பண்டிதர்:-** போதைப் பொருளை ஒழிப்பதில் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க மிகவும் உறுதியாக இருக்கிறார்.இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எங்கட தமிழர் தாயகத்திலும் போதைப் பொருளை முற்றாக ஒழித்துக் கட்ட வேண்டும்.

**விதானையார்:-** பண்டிதர் சொல்லுறது நூறுவீதம் உண்மை. போதை வஸ்த்தால எங்கட எத்தனையோ இளம் பிள்ளைகள் தங்கட் அருமந்த வாழ்க்கையைத் தொலைத்துப் போட்டு நிக்கினம்.

இதைவிட, பிள்ளைகளின்ர போதை வஸ்துப் பாவனையால, பெற்றோர்கள் படும்பாடு போதுமென்றாயிற்று.

ஆகையால எங்கட சமூகத்தை அழிக்கிற போதைப் பொருளை என்ன பாடு பட்டும் ஒழித்தே ஆகவேண்டும்.

இவ்வாறு விதானையார் விஸ்வலிங்கம் ஆக்ரோஷமாகக் கூற, ஆலடி மீண்டும் நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி,முன்பு ஒரு போதும் இல்லாத வகையில இந்தமுறை (2025) சூரன்போர் களைகட்டியிருந்தது என்ன சங்கதி.

**வாத்தியார்:-** எல்லாம் போல செய்யிற நோய் தான்.

**மூப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற நல்லூர்க்கந்த சுவாமியார் ஆலய மஹோற்சவத்தின்ர ஒருமுகத் திருவிழாவின் போது ... **நல்லூர் கந்தசுவாமியார் பரியேறி வருகிறார்** என பிரசன்னக் குருக்கள் உரத்த குரலில் கூற, அது உலகெங்கும் பரவி பேசு பொருளாயிற்று.

இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் ஒருமுறை யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, நல்லூர் கந்த சுவாமியார் ஆலயத்திற்கு வழிபடச் சென்ற போது, அந்தக் கட்டியம் பற்றியும் பிரஸ்தாபித்திருந்தார்.

பிறகென்ன, இப்ப எல்லாக் கோயில்களிலும் அந்தக் கட்டியம் கூறப்படுகிறது. இதைத்தான் போலச் செய்யிறது எனக் கூறுவது.

ஆலயத்தில சிறப்பான ஒருவிடயம் நடந்து விட்டால் , அதை எல்லோரும் பின்பற்றி அந்த சிறப்பை நலினப்படுத்திப் போடுவினம்.

தாம் தாம் சிந்தித்து இறைபக்தி மிகுந்த நிகழ்வுகளை புதிதாக அறிமுகப்படுத்தினால் அது எவ்வளவு நல்லதாக இருக்கும்.

இதைவிடுத்து நல்லூர்க் கந்தசுவாமியார் கோவில் போல, வில் மண்டபம் கட்ட வேணும்,கட்டியம் கூற வேணும், சூரன்போர் நடத்த வேணும் எண்டு நினைக்கிறதால தான் இந்த முறை சூரன் போர் உக்கிரம் கொண்டதாக மாறிவிட்டது.

**சாத்திரியார்:-** சூரன் கையாண்ட போர் யுக்திகள் பற்றி கந்தபுராணம் மிகத் தெளிவாகக் கூறுகிறது.

**பண்டிதர்:-** சாத்திரியார் இப்ப ஆரு கந்தபுராணம் படிக்கினம். இது முகநூல் யுகம். இந்த யுகத்தில எல்லாம் சுருக்கம் தான்.

ஏன் இந்த முறை நல்லூர் கந்தசுவாமியார் ஆலயத்திலும் சூரன் உறுமிக் கொண்டு வருவது போன்ற காட்சி இடம் பெற்றது.

இதைவிட கிளிநொச்சியில உள்ள ஒரு முருகன் ஆலயத்தில, அந்தணச் சிவாச்சாரியார் ஒருவர் மயில் வாகனத்தில ஏறி சூரனை வதம் செய்யும் காட்சி சமூக வலைத்தளங்களில வைரலாகியது.



## முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை களைகட்டிய சூரன்போர்

இது பற்றிய விமர்சனங்கள் பல வாறாக இருந்தன. என்ன இருந்தாலும் இனி வரும் காலங்களில அந்தணச் சிவாச்சாரியார்கள் புதுப் புது முறைகளை; பூசை வழிபாடுகள், மகோற்சவங்கள், வேட்டைத் திருவிழாக்களில அறிமுகம் செய்வினம் என்பது மட்டும் உண்மை.

**சிறாப்பர்:-** என்னத்தை அறிமுகம் செய்தாலும் பரவாயில்லை. இறை பக்திக்கும் இறை நம்பிக்கைக்கும் குந்தகம் இல்லாமல் - சிவாச்சாரியர்களும் குரு என்ற உயர்ந்த ஸ்தானத்திற்கு அவகௌரவத்தை ஏற்படுத்தாமல் நடந்து கொண்டால் அது போதும்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, ஆலடி அமைதியாகியது. அமைதியைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** என்ன இருந்தாலும் அடுத்த முறையில இருந்து கந்த சஷ்டி காலத்தில, கடைசி சூரன் போரில் அன்றாவது நல்லூர் கந்த சுவாமியார் ஆலய சூழலில வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்க வேணும்.

இந்த முறை சூரன் போரின் போது நல்லூர் கந்தனின் ஆலய வளாகத்திற்குள் வாகனங்கள் நுழைந்ததால பக்தர்கள் மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொண்டார்கள்.

எனவே இது விடயத்தில யாழ்ப்பாண மாநகர சபை கவனம் செலுத்த வேணும் எண்டு ஆலடியில ஒரு கோரிக்கையை முன்வைப்போம் என வாத்தியார் கூற, அதனைத் தானும் வரவேற்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**தங்கத்தின் விலை ஏறுவதும் இறங்கு வதுமாய் இருக்கிறதே. வியாசரிடம் தங்கம் இருக்குதா?**

*தேவா-சாவகச்சேரி*

ஏற்கனவே தங்கத்தை வைத்திருப்பவர் (கள்) படும்பாடு எமக்குத் தெரியுமே.

அண்மையில் வங்கி உத்தியோகத்தர் ஒருவர் கூறினார். உலக நாடுகளில் இந்தியாவிடம் அதிகமான தங்கம் இருக்கிறது.

உலக சந்தையில் தங்கம் விலை ஏறினால் அது இந்தியாவை உயர்த்தி விடும் என்பதற்காக அமெரிக்காவும் சீனாவும் இணைந்து தங்கத்தின் விலையை ஏறவிடாமல் தளம்பல் நிலையில் வைத்திருக்கின்றார்களாம்.

எதிரிக்கு எதிரி நண்பன் என்பதை அமெரிக்கா-சீனா உறவில் உணரக்கூடியதாக உள்ளது.




Dude படம் எப்படி இருக்கிறது வியாசரே?

**நாம் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைக்கிறதே என்பது?**

*தமிழ்-யாழ்ப்பாணம்*

எதிர்க்கட்சியின் நிலை இதுதான். ஆம், எதையாவது பேசி இந்த அரசை வீழ்த்தி விடுவோம் என்று அவர்கள் பேசும் அனைத்தும் இந்த அரசாங்கத்திற்கு சாதகமானதாகவே இருக்கிறது.

போதைவஸ்தை ஒழிப்பதற்கு அரசு வேகம் எடுக்கும் போது இது அரசின் இரட்டைவேடம் என்கிறது. பாதாள உலகக் குழுக்களின் பிரதிநிதிகளைக் கைது செய்யும் போது இது தேவையில்லாத வேலை என்கிறது.

இவை இரண்டையும் மக்கள் ஆதரிக்கின்றனர். இருப்பதையும் இழப்பதாய் பேசுவதை எதிர்க்கட்சியினர் நிறுத்தினால் நல்லது.

**Dude படம் எப்படி இருக்கிறது வியாசரே?**

*பிரவீஸ்-பருத்தித்துறை*

தான் காதலித்து திருமணம் செய்த பெண் இன்னொருவனை விரும்புவது தெரிந்ததும் தன் மனைவியை அவளின் காதலனுடன் சேர்த்து வைப்பது தான் படத்தின் கதை.

ஆனால் இதில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்தபின் அவளைக் காதலனுடன் சேர்த்து வைத்து அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைக்குத் தான் அப்பாவாக இருப்பதெல்லாம் எமது கலாசாரத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள்.

இப்படிப்பட்ட சமூக கட்டமைப்பை உடைத்தெறியும் கதைக்களத்தைக் கொண்ட இப்படம் இற்றைவரை வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதும் 100 கோடியைத் தாண்டியதும் வேதனையான விடயம்.

**போதையை ஒழிப்பதற்கு வியாசரிடம் ஏதாவது ஐடியா இருக்கிறதா?**

*தேவமனோகர்-மந்துவில்*

என்னைப் பொறுத்தவரை பெற்றோர்கள் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகள் தொடர்பில் மிகமிக அவதானமாக இருந்தால் போதையை மிகவும் இலகுவாக முறியடிக்கலாம்

பிள்ளைகளுடன் சகஜமாகப் பேசி அவர்களின் மனதில் உள்ள இறுக்கத்தை கரைக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் மாலை நேரம் இன்று முழுவதும் நடந்த விடயங்கள் தொடர்பில் பிள்ளைகளுடன் கலந்துரையாடிப் பாருங்கள். உங்கள் பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மறுபேச்சு பேச மாட்டார்கள்.

ஆனால் நாங்கள் பிள்ளைகளைக் கவனிக்காமல் பணத்திற்காக வேலை வேலை என்று அலைகிறோம்.

**நம்மைப்பிடிச்ச சனியன் விடாது போலவே என்பது போல சிலர் நடக்கின்றனரே?**

*தருஷ்-வதிரி*

தவளையும் தன்வாயால் கெடும் என்பார்களே. அது சிலருக்குச் சுலபமாக பொருந்தி விடும். ஒருவனுக்கு மக்கள் ஆதரவு கிடைத்திருக்கிறது எனின் அந்த ஆதரவை மக்களுக்கானதாய் பயன்படுத்த வேண்டும்.

அதை ஒருநாளும் தனது சுயநலனுக்கோ? அதை இழிவுபடுத்தும் செயலிலோ ஈடுபடக் கூடாது.

தற்போது கூட ஒருவர் எவ்வளவு ஆட்டம் போட்டார். அது இதுவென்று பொய் மேல் பொய் சொன்னார். அவரை யார் தூக்கி தலையில் வைத்தனரோ அவர்களே தூற்றத் தொடங்கி விட்டனர். அவர் இப்போது காமடிப் பீசாகி விட்டார்.

**பொறுப்பற்று சீரழிந்து போகும் எம் சமூகத்தை எவ்வாறு சீர்ப்படுத்தலாம் வியாசரே?**

*சாயிசெல்வம்-பருத்தித்துறை*

போதை எம் படலை வரை வந்து விட்டது. அதை ஒழிப்பதற்கு யார் முன்நிற்கின்றனரோ அவருடன் இணைந்திருப்பதே சரியானது.

எனது மகனுக்கு தற்போது பத்து வயது. அவன் இன்று சிறுவன். இன்னும் பத்து வருடங்களில் அவனது வயது இருபது.

இந்த போதை உலகத்தில் அவனை விட்டுச் செல்வதற்கு நான் விரும்புவேனா? அல்லது போதையில்லாத உலகில் அவனைப் பயணிக்க வைக்க விரும்புவேனா?

இந்தக் கேள்வியை ஒரு பொறுப்புமிக்க தந்தையாக உங்களிடம் கேட்கின்றேன்.

**உள்நாட்டில் பெரும் குற்றாவளிகள் இருக்க வெளிநாட்டில் உள்ள சிறு குற்றவாளிகள் கைது செய்யப்படுவது ஏன் வியாசரே?**

*சுதன்-குப்பிழான்*

எம்.ஜி.ஆர், ரஜனி, விஜய், அஜித் போன்றோரின் திரைப்படங்களில் முதலில் அடி வாங்குவது சாதாரண அடியாட்களே.

அவர்களையெல்லாம் அடித்து துவைத்து விட்டு இறுதியாகத்தான் வில்லனுடன் மோதுவார் கதாநாயகன்.

அதுபோலத்தான் இப்போதைய நிகழ்வும். இப்போது அடியாட்களைத் துவைக்கும் கட்டம் நடக்கிறது. அடுத்த கட்டம் நீங்கள் மனதில் நினைக்கும் ஒவ் வொருவரையும் அடித்துத் துவைக்கும் கட்டமாகத்தான் இருக்கும். அது வரை பொறுமனமே.

**இலகுவாகப் படிப்பதற்கு ஏதும் வழி இருந்தால் சொல்ல முடியுமா வியாசரே?**

*செ.சகிதா-மந்துவில்*

பாடசாலைப் படிப்புடன் நின்று விடுவது நல்லது. அந்த வகுப்பு இந்த வகுப்பு என்று அலைந்து திரிந்து படிபடி என்று படித்துவிட்டு பரீட்சை அன்று சோதனைப் பேப்பரை எழுதினால் பிச்சைக்காரன் எடுத்த சத்தியைப் போல இருக்கும் உங்கள் பதில்கள்.

பரீட்சையில் வரும் கேள்வியை வாசிக்கும் போது எமக்கு கற்பித்த ஆசிரியர் நினைவுக்கு வர வேண்டும். அப்போதே எம்மால் எழுதும் பதில் சரியானதாயும் குழப்பம் இல்லாமலும் இருக்கும்.



தங்கத்தின் விலை ஏறுவதும் இறங்குவதுமாய் இருக்கிறதே. வியாசரிடம் தங்கம் இருக்குதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்

# வசீம் தாஜுதீன் மரண விசாரணை

## விலகாத மர்மங்கள்

சட்ட வைத்தியர் பேராசிரியர் ஆனந்த சமரசேகர, வசீம் தாஜுதீன் மரண அறிக்கையைத் திரிபுபடுத்தி எழுதியுள்ளார். இலங்கை அரச நிர்வாகத்தின் படுமோசமான துஷ்பிரயோகம் இது. வசீம் தாஜுதீன் மரணத்தைப்பற்றி நாம் கடந்தவாரம் இதே பகுதியில் எழுதியிருந்தோம். தாஜுதீனின் உடலைப் பிரேதப் பரிசோதனை செய்த வைத்தியர் ஆனந்த சமரசேகர பொலிஸ் விசாரணைகளுக்குச் சரியாய் ஒத்துழைக்கவில்லை என்று அறிய முடிந்தது. மே 17, 2012ஆம் ஆண்டு வசீம் தாஜுதீன் சென்ற வாகனம் நாரஹேன்பிட் டிய சாலக்கா மைதானத்திற்கருகில் ஒரு மதிலில் விபத்துக்குள்ளாகி அவர் இறந்துபோனதாக மறுநாள் இலங்கைப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

மே 18, வசீம் தாஜுதீனின் உடலைப் பரிசோதித்த வைத்தியர் ஆனந்த சமரசேகர, காலை 11 மணிக்கு தன்னுடைய இளையவர்களான வைத்தியர்கள் ஸ்ரீயந்த அமரசேன மற்றும் ரா்ஜகுருவிடம் உடலை ஒப்படைத்து இது விபத்து அல்ல. இதில் ஏதோ ஒரு பிரச்சினை இருப்பதுபோல தெரிகிறது. இந்தப் பிரேதப் பரிசோதனையைக் கச்சிதமாகச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு வெளியே போனார். இரண்டு வைத்தியர்களும் பரிசோதனைகளை ஆரம்பித்த சில நொடிகளில் அவர்களுக்கு இந்த மரணம் விபரீதமானது என்று புரிந்துபோனது. தாஜுதீனின் தொண்டைப் பகுதியிலும் நெஞ்சுப் பகுதியிலும் துவாரங்கள் இருந்தன. தொடை எலும்புகள் முழங்காலுடன் இணையும் இடங்கள் மோசமாக நொறுக்கப்பட்டிருந்தன. பற்கள் உடைக்கப்பட்டிருந்தன.

எல்லாவற்றையும் தம் பரிசோதனை அறிக்கைகளில் குறித்துக்கொண்ட வைத்தியர்களும் பிரேதத்தை பிரீசரில் போட்டுவிட்டு போய்விட்டார்கள். வைத்தியர் ஆனந்த சமரசேகர பகல் 12:30 அளவில் அவசரமாகத் திரும்பி வருகிறார். ஸ்ரீயந்தவும் ராஜகுருவும் எழுதியிருக்கக்கூடிய அறிக்கையைப் படித்துவிட்டு தாஜுதீனின் பிரேதத்தை மீண்டும் தனியாகப் பிரேதப் பரிசோதனை செய்ய ஆரம்பித்தார். இந்த மரணத்தில் ஏதோ ஒரு விடயம் இருக்கிறது. கவனமாய்ப் பார்த்து வேலை செய்யுங்கள் என்று சகாக்களிடம் சொல்லிவிட்டு போன அதே ஆனந்த சமரசேகர, மொத்தமாக தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, இது ஒரு விபத்தால் ஏற்பட்ட மரணம் என்று பிரேதப் பரிசோதனை அறிக்கை வழங்கியிருந்தார்.

ஜனவரி 08, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு, நல்லாட்சி குழு பதவிக்கு வருவதற்கு தாஜுதீன் மரணம் தேர்தல் மேடைகளில் வாக்கள்ளும் இயந்திரமாக்கப்பட்டது. ராஜித சேனாரத்ன, வசீம் தாஜுதீன் கொலைக்கு ராஜபக்ஷவினுடைய மனைவி சிராந்தி ராஜபக்ஷ சம்பந்தப்பட்டு இருப்பதாகவும், அலரி மாளிகையில் இருந்து தாஜுதீனைச் சித்திரவதை செய்த இடத்தில் இருந்த நபர்களுக்கு 42 தொலைபேசி





அழைப்புகளை வழங்கியிருந்ததாகவும், மக்களை அச்சத்தில் உறையச் செய்யும் உரைகளை அந்தக் காலத்தில் ஆற்றியிருந்தார்.

பின்நாளில் சிராந்தியினுடைய கால்ட்டன் இல்லத்திற்குச் சொந்தமான டிபண்டர் வாகனம் தாஜுதீனை பின்தொடர்ந்து சிஐடியால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அன்றைய அரசு விசாரணை மேற்கொண்ட சிஐடி பணிப்பாளர் ஷானி அபேசேகர போன்றோருக்கு எந்த ஒத்துழைப்பையும் வழங்கவில்லை. சிராந்தி மற்றும் யோஷிதவின் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த படைவீரர்களின் விபரங்கள் மற்றும் குறித்தத் தினங்களில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் பற்றிய எந்தவொரு விபரத்தையும் வழங்க ரணில் - மைத்திரி அரசு மறுத்துவிட்டது.

வசீம் தாஜுதீனின் உடல் யூலை 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு முன் மீண்டும் தெஹிவளை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் இருந்து எடுக்கப்பட்டு இரண்டாவது தடவையாகப் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அந்நாட்களில் இலங்கையில் மிகப் பிரபலமான வைத்தியர்களான அஜித் தென்னக்கோன், ஜீ.பெரேரா [illegible] ஆகியோர் பிரேதப் பரிசோதனை நடத்தினார்கள். தாஜுதீனின் சடலத்தின் தொடை எலும்புகளும், நெஞ்சு எலும்புகளும், தொண்டைக்குழி எலும்புகளும் காணாமல் போயிருப்பதைக் கண்டு பேரதிர்ச்சிக்குள்ளானர். இப்போது என்ன செய்வது? தாஜுதீனின் சடலத்தை ஆரம்பத்தில் பிரேதப் பரிசோதனை செய்த வைத்தியர்கள் ஸ்ரீயந்த அமரசேன மற்றும் ராஜகுரு ஆகியோர் பிரேதப் பரிசோதனை செய்த சம்பூரணமான அறிக்கையைக் கண்டுபிடிக்கிறார்கள். தொண்டைக்குழி எலும்புகளும், நெஞ்சு எலும்புகளும், தொடை எலும்புகளும் சேதமாக்கப்பட்டு இருப்பதாக ஸ்ரீயந்தவும் ராஜகுருவும் அப்போது எழுதிய அறிக்கைக்குச் சான்றுபகரும் விதமாக அன்றைய எக்ஸ்ரே அறிக்கை எல்லா எலும்புகளும் பத்திரமாகவிருப்பதையும் விபரிக்கிறது. ஆனால் அவை சேதமாக்கப்பட்டிருந்தன. ஆகவே வைத்தியர் ஸ்ரீயந்த மற்றும் ராஜகுருவின் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு தாஜுதீனின் எலும்புகளை களவாடியது யார்? என்று விசாரணைகள் ஆரம்பமாகின. விடை தெரியாத கேள்விகள் எங்கும் ஆக்கிரமித்திருந்த நிலையில் விசேட வைத்தியர் குழு தாஜுதீன் கொடூரமாய் வதை செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக முடிவுக்கு வந்தனர்.

தாஜுதீனை எங்கோ கொன்றுவிட்டு ஒரு விபத்தாய் நாடகமாடி இருக்கிறார்கள் என்று முடிவு செய்தார் ஷானி அபேசேகர. சிஐடி, 2012 தாஜுதீனின் பிரேதப் பரிசோதனையோடு சம்பந்தப்பட்ட வைத்தியர் ஆனந்த சமரசேகரவையும் உதவியாளர்களாயிருந்த ஸ்ரீயந்த மற்றும் ராஜகுருவையும் விசாரணைக்குள் கொண்டு வருகிறார்கள். எலும்புகளுக்கு என்ன நடந்தது என்று ஆனந்த சமரசேகரவிடம் விசாரித்தபோது, தனக்கு எதுவும் தெரியாது என்று முதலில் கைவிரித்தார். ஸ்ரீயந்த மற்றும் ராஜகுருவிடம் விசாரித்தபோது, நாங்கள் பிரேதப் பரிசோதனை செய்தோம். நாங்கள் இன்று காணாமற்போய் இருப்பதாகச் சொல்லப்படும் எலும்புகள் தொடர்பாக அறிக்கையும் எழுதி வைத்தோம். அதுமட்டுமல்ல தாஜுதீன் உடலில் ஏற்பட்டிருந்த அசாதாரண காயங்கள் பற்றி ஆனந்த சமரசேகரவிடமும் முறையிட்டோம் என்றார்கள்.

மேலும் இந்த எலும்புகளை வைத்தியர் ஆனந்த சமரசேகர வேறாக எடுத்துக்கொண்டார் என்று வைத்தியர் ராஜகுரு மேலும் ஒரு அறிக்கையில் எழுதியிருந்தார். உடனே மீண்டும் சிஐடி ஆனந்த சமரசேகரவை நெருங்கியது. எலும்புகளை நீங்கள் எடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அறிக்கையும் இங்கே இருக்கிறது. எங்கே எலும்புகள் என்று எகிறினார்கள் சிஐடி. அதுவா? நான் மேலதிகப் பரிசோதனைகளுக்காக எடுத்தேன். அதை ஒரு ரொலியின் மீது வைத்தேன். அதன் பின்னர் எனக்கு மறந்துவிட்டது. அந்த எலும்புகளுக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை என்றார்.

மீண்டும் ஆனந்த சமரசேகர, ஸ்ரீயந்த அமரசேன மற்றும் ராஜகுரு ஆகியோரை ஒன்றுசேர்த்து விசாரணைகள் ஆரம்பமாகின. பிரேதப் பரிசோதனையை நீங்களா மேற்கொண்டீர்கள் என்று ஆனந்த சமரசேகரவிடம் கேட்டபோது எந்த தயக்கமும் இன்றி ஆம், நான்தான் என்றார். ஆனால் ஸ்ரீயந்தவும் ராஜகுருவும் அதனை மறுத்துவிட்டனர்.

நாங்கள்தான் முதலில் பிரேதப் பரிசோதனை செய்தோம். எங்களுக்குத் தாஜுதீனின் உடலில் காயங்கள் இருந்த இடங்கள் தொடர்பாகச் சந்தேகங்கள் ஏற்பட்டது. நாங்கள் ஒன்றும் விடாமல் எல்லாவற்றையும் குறித்து வைத்திருக்கிறோம். இந்த நிலையில் ஆனந்த சமரசேகர மீண்டும் வந்தார். அவர் தனியே பிரேதப் பரிசோதனை மேற்கொண்டார். இது ஒரு விபத்து என்று தனது கடைசி அறிக்கையை எழுதினார். எம்மிடம் பலவந்தமாகத்தான் கையொப்பங்களை வாங்கினார். நாம் கையொப்பம் வழங்காவிட்டால் எமது மேற்படிப்புக்கு அனுமதிக்கப்போவதில்லை என்று மிரட்டினார். எமக்கு வேறு வழியில்லாமல் கையொப்பங்கள் வைத்தோம் என்றனர். ஒரு பிரேதப் பரிசோதனை நடக்கும்போது அது எந்தவகையான மரணம் என்றாலும் நீதிமன்ற விவகாரம் என்றபடியால் அந்தப் பிரேதப்பரிசோதனை நடக்கும் நிகழ்வைப் புகைப்படம் எடுப்பார்கள்.

தாஜுதீனின் மரணப் பரிசோதனை நடந்தநேரம் 79 புகைப்படங்கள் எடுக்கப்பட்டதைக் கண்டுபிடித்தது சிஐடி. ஆனால் எந்தவொரு புகைப்படத்திலும் ஆனந்த சமரசேகர இல்லை. நீங்கள் பிரேதப் பரிசோதனை செய்தால் இந்தப் புகைப்படங்களில் இருக்க வேண்டுமே. நீங்கள் ஒரு புகைப்படங்களிலும் இல்லையே என சீஐடி கேட்டபோது, என்னைக் காட்சிப்படுத்தாமல் மற்றவர்களை வைத்துப் புகைப்படங்களை எடுக்கச் சொல்லி நான்தான் சொன்னேன் என்று மீண்டும் ஓர் அபூர்வமான காரணம் சொன்னார் அவர். ஆனந்த சமரசேகரவுக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது ஆனால் 2020ஆம் ஆண்டு அவர் இறந்துபோனபோது கொழும்பு மேல்நீதிமன்றம் இந்த வழக்கு முடிவுக்கு வருவதாக அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய சமுதாயத்தை விழுங்கும் போதை!



நாட்டின் நாளைய தலைவர்களுக்கான அச்சுறுத்தலாக இருப்பது போதைப்பொருளே. சமூகத்தால் போற்றப்படுகின்ற மாணவச் சமுதாயம் இன்று போதைப்பொருட்கள் என்னும் உலகிற்குள்ளே செல்கிறது. பாடசாலை மற்றும் கல்லூரி வளாகங்களைச் சுற்றியும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் போதைப்பொருட்களின் பாவனையானது அதிகரித்துள்ள நிலையால் இளைய தலைமுறையினரின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

தலைமுறை மாற்றம் என்பது வெறுமனே நாட்காட்டி மாற்றம் மட்டும் அல்ல. அது நம் மாணவர்களின் மனதிலும் உடலிலும் ஏற்படும் மாற்றமாகவே இருக்க வேண்டும். முன்பு போதைப்பழக்கத்திற்குக் குடும்பப் பின்னணி, பொருளாதாரச் சிக்கல்கள் போன்ற காரணங்களே இருந்தது. ஆனால் இன்று நிலைமை மாறி போதைப்பொருள் பாவனை என்பது நண்பர்கள் வட்டத்தில் ஒருவிதமான "Cool Fashion" ஆகக் கருதப்படுவது மிக அபாயகரமான புதிய போக்காக இன்று உள்ளது.

சமூக ஊடகங்களில் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ சமூக ஊடகங்கள் வாயிலாக மகிமைப்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. இது பிஞ்சு மனதில் போதை குறித்த தவறான கவர்ச்சியை ஏற்படுத்துகிறது. தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்கள் மட்டுமின்றி போதை மாத்திரைகள் மற்றும் போதை தருகின்ற இரசாயனப்பொருட்கள்கூட மாணவர்களை எளிதில் சென்றடைந்து போதை ஊடுருவலின் புதிய தோர் வடிவமாக காணப்படுகின்றது.

இன்றைய பெற்றோர்கள் வெறுமனே காவலர்களைப் போல் மட்டும் இல்லாமல் மனநல வழிகாட்டிகளாக மாறவேண்டும். பிள்ளைகள் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்துப் பேசக்கூடிய ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குவது அவசியமான ஒன்று. அவர்களின் அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய சிறு மாற்றங்களைக்கூட அவதானித்து அதற்கான தீர்வினை பெறவேண்டும். அதே போன்று ஆசிரியர்களும் வெறும் பாடங்களை நடத்துவதோடு மட்டும் நிற்காது மாணவர்களுடன் தனிப்பட்ட முறையில் உரையாடக்கூடிய ஒரு வழிகாட்டியாக செயற்பட்டு கல்வியிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களை செய்வது அவசியமான ஒன்று. போதைப்பொருள் பாவனையானது மாணவர் சமுதாயத்தின் இடையே காணப்படுவது என்பது ஒரு தற்காலிகப் பிரச்சினையாகவோ அல்லது கடந்துபோகக் கூடிய விடயமோ அல்ல. இது நம் சமூகத்தின் அடித்தளத்தையே அசைக்கக்கூடிய அளவு ஆழமான புற்று நோயாகும்.

ஒரு சில மாணவர்களின் வாழ்க்கையைப் பாதிப்பதோடு மட்டும் நின்றுவிடாது நாட்டின் உற்பத்தித் திறன், சட்ட ஒழுங்கு மற்றும் பொதுச் சுகாதாரத்தையும் இது கடுமையாகப் பாதிப்பதாக அமைகிறது.

போதைக்கு எதிரான இந்தப் போரில் நாம் அனைவரும் ஓரணியாக திரண்டு மாணவர்களின் கைகளைப் பிடித்து அவர்களுக்கான ஒளியை நோக்கிச் செல்ல வழிநடத்த வேண்டும். இளைய தலைமுறை என்பது ஒரு பொக்கிஷம். அது அரக்கர்கள் கைகளில் சிக்கிவிடாமல் பாதுகாப்பது அவசியமான ஒன்று. இன்றைய முயற்சிகள் அனைத்துமே நாளை ஒரு ஆரோக்கியமான சமூகத்தைப் பாதுகாக்கும்!

ஸ்ரீ. ஜனுக்ஷி - [illegible]

# ஆச்சி அறிவுரை



## இணைந்த குளியலறைகள் எங்கள் கலாசாரத்துக்குச் சரியானதா?

**பேராண்டி...**

எண்டைக்கு எங்கட சமூகம் மலசலகூடத்தையும் குளியலறையையும் வீட்டுக்குள்ள கொண்டு வந்தினமோ அண்டைக்கே எங்கட சமூகத்திட்ட இருந்த ஆரோக்கியம் கெட்டுப்போச்சு.

எங்கட முன்னோர்கள் ஒண்டும் முட்டாள்கள் இல்லை. ஒரு வீட்டில கிணறு ஈசானிய மூலையிலை இருக்கவேணும்.

அதேபோல மலசலகூடம் தென்கிழக்கு மூலையிலை இருக்கவேணும். இப்ப இதை சாத்திரம் எண்டு ஒரு வரியிலை தூக்கி எறிஞ்சிட்டினம்.

ஆனால் அதுக்குப் பின்னால இருக்கிற ஆரோக்கியம், சுகாதாரத்தைப் பற்றி எவரும் சிந்திக்கிறதில்லை. கிணத்துக்குப் பக்கத்தில மலசலகூடம் இருந்தால் நிலத்தடி நீரில் கலக்கிற மலசலகூடக் கிருமி கிணத்துத் தண்ணியில கலந்திடும்.

அப்பிடிக் கலந்தால் அது மனித ஆரோக்கியத்துக்குக் கூடாது எண்டு எங்கட முன்னோர்கள் கருதினதாலதான் கிணத்தையும் மலசலகூடத்தையும் தூரத் தூர வைச்சினம்.

ஆனால் அதை எங்கட ஆக்கள், ஆடம்பரம் எண்டுற கன்றாவியைக் காட்டி இரண்டையும் ஒண்டா வைச்சு பெருமைப்படுகினம்.

இப்ப வீட்டுக்குள்ள ஒவ்வொரு அறைக்கு ஒரு இணைந்த குளியலறை (குளியலறை, மலசலகூடம்) கட்டி பெருமைப்படுகினம். அதோட, வழமையா எங்கட மலசலகூட முறையை மாற்றிக் கொமேட் அது, இதுவெண்டு அரியண்டப்பட வைக்கினம்.

வீட்டு விறாந்தையிலை ஆக்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்க ஆரும் மலசலகூடத்துக்குப் போனால் சாப்பிடுற ஆக்களின்ர சங்கடத்தைப் பற்றி ஒருக்கால் நினைச்சுப் பாருங்கோவன். அருவெருப்பா இருக்கெல்லோ? இப்ப புரியுதா எங்கட முன்னோர்கள் முட்டாள்களா? எல்லாம் தெரிஞ்ச படிச்ச மனிசர் நீங்கள் முட்டாள்களா? எண்டு.

பேராண்டி, நாகரிகம் வளரத்தான் வேணும். அதில மாற்றுக் கருத்தில்லை. ஆனால் நாகரீகம் எங்கட பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறைகளை அழிச்சால் அது அந்த இனத்துக்கு ஆரோக்கியம் இல்லை.

என்ன; நான் சொல்லுறது சரிதானே பேராண்டி?

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மழை – குளிர் காலத்தில் குளிர்ந்த நீரில்... குளிக்கலாமா?



“மனிதர்கள் “warm-blooded animal” வகையைச் சேர்ந்தவர்கள். நம்முடைய உடலின் வெப்பநிலையை நம் தோலிலிருக்கின்ற இரத்த ஓட்டம்தான் சீராக வைத்திருக்க உதவுகிறது. திடீரென அதிகப்படியான குளிர்ச்சி நம்முடைய தோலைத் தாக்கும்போது இரத்தக் குழாய்கள் சுருங்க ஆரம்பிக்கும். இந்த நேரத்தில் கிட்டத்தட்ட ஒரு லீற்றர் இரத்தம் இதயத்துக்குள் வரும். இதயம் அந்த இரத்தத்தை பம்ப் செய்து மூளைக்கு அனுப்பும். மூளைக்கு அதிகப்படியான இரத்தம் செல்லும்போது மூளைக்குள் இரத்தக்கசிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். இந்த இரத்தக்கசிவு மூளையின் உட்புறமும் ஏற்படலாம், வெளிப்புறமும் ஏற்படலாம். குளிர்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலும் மிகக் குளிர்ந்த நீரில் குளிப்பதைத் தவிர்ப்பதே நல்லது. நாம் குளிக்கும் நீர் 25 டிகிரி வெப்பநிலைக்கு மேல்தான் இருக்க வேண்டும்.

இரவு நேரங்களில் வெளிப்புற வெப்பநிலை 24 அல்லது 23 டிகிரி வரை குறையும். குளிர்காலத்தில் இது இன்னும் குறையும். இரவிலும் குளிர்காலத்திலும் தண்ணீர் மிகவும் சில்லென்று இருக்கும். இந்த நேரத்தில் தவிர்க்க முடியாத காரணங்களுக்காகக்கூடக் குளிர்ந்த நீரை முதலில் தலையில் ஊற்றக்கூடாது.

வீட்டில் குளித்தாலும் சரி, நீர் நிலைகளில் குளித்தாலும் சரி, முதலில் பாதங்களில், அடுத்து முட்டிகளில், பிறகு இடுப்பில், நெஞ்சில், கடைசியாகத்தான் தலையில் தண்ணீர் படவேண்டும்.

வேகமான நீர்வீழ்ச்சியில் குளிக்கும்போதுகூட மூளை நரம்புகளில் சேதம் ஏற்படலாம். அதனால்தான், நீர்வீழ்ச்சி வேகமாக இருக்கும்போது பொதுமக்களைக் குளிப்பதற்கு அனுமதிக்கமாட்டார்கள். நீர்வீழ்ச்சியின் வேகம் மூளை நரம்புகளை மட்டுமல்ல கண் நரம்புகளையும் பாதிக்கலாம்.

# அச்சுறுத்தும் கொசு; இயற்கை முறையில் விரட்டுவதெப்படி?



**கொசுக்களை இயற்கை முறையில் விரட்டும் வழிகளை பலரும் நாடிச் செல்கின்றனர்.**

**அவர்களுக்காக, இயற்கை வழியில் கொசுக்களை எப்படி விரட்டுவது...?**

தேங்காய் எண்ணெயை ஒரு கரண்டியில் ஊற்றி சூடாக்கி அதில் கற்பூரம் சேர்த்தால் கரைந்துவிடும். சூடு குறைந்ததும் அந்த எண்ணெயை கை கால் மற்றும் உடல் பகுதியில் தேய்த்தால் கொசுக்கள் நம்மை நெருங்காது. இதேபோல் கிராம்பு தைலம், அதனுடன் சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து கை காலில் பூசினாலும் கொசுக்கள் நம்மை நெருங்காது.

நொச்சி இலையைக் காய வைத்து அதை நெருப்பில் போட்டு எரித்து அதன் புகையை மாலை நேரத்தில் கதவு, ஜன்னல் பகுதிகளில் காட்டினால் கொசுக்கள் நுழைவதைத் தடுக்கலாம்.

தேங்காய் நாரைத் தீயிட்டுக் கொளுத்தினால் கொசுக்கள் அங்கிருந்து விலகிச் செல்லும். வேப்பிலையுடன் வைக்கோல் சேர்த்து எரியூட்டினால் அதிலிருந்து வெளிப்படும் புகையும் கொசுக்களை விரட்டும். மா இலை மற்றும் அதன் பூக்களை நெருப்பிலிட்டு அதன் புகையை வீடு முழுவதும் காட்டினால் கொசுக்கள் நெருங்காது.

வேம்பு, துளசி, சிறியாநங்கை, நொச்சி, ஆடாதோடை, தும்பை ஆகிய இலைகளை வெயிலில் காய வைத்துப் பொடியாக்க வேண்டும். அதனுடன் சாம்பிராணி, குங்கிலியம் போன்றவற்றைக் கலந்து நெருப்புத்தணலில் போட்டு அதன் புகையை வீடு முழுவதும் காட்டலாம். இலைகளை இப்படி எரியூட்டுவதால் அதை சுவாசிக்கும்போது ஏதும் பிரச்சினை வரும் என்று பயப்படத் தேவையில்லை. இவற்றின் புகை ஒவ்வொன்றுக்கும் சில மருத்துவ குணங்கள் இருக்கின்றன என்பதால் தாராளமாகப் பயன்படுத்தலாம்.

# பூசணி சாதம்



## சமைப்போம் சுவைப்போம்

### தேவையானவை:

- துருவிய பூசனிக்காய் – ஒரு கப்
- வெங்காயம் – ஒன்று (நறுக்கவும்)
- பச்சை மிளகாய் – 4 (நறுக்கவும்)
- மிளகுத்தூள் – ஒரு கரண்டி
- இஞ்சி – ஒரு துண்டு (நறுக்கவும்)
- பூண்டு – 5 பற்கள் (நறுக்கவும்)
- கரம் மசாலாத்தூள் – ஒன்றரை கரண்டி
- வடித்த சாதம் – 2 கப்
- எண்ணெய், உப்பு (தேவையான அளவு)





### செய்முறை

ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு சூடாக்கி பொடியாக நறுக்கிய இஞ்சி, பூண்டு சேர்த்து வதக்கவும். இதனுடன் பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். வெங்காயம் நன்கு வதங்கியதும் பூசணித் துருவலைச் சேர்த்து வதக்கவும். பூசணித்துருவல் நன்கு வதங்கியதும் தேவையான உப்பு மற்றும் மிளகுத்தூள், கரம் மசாலாத்தூள் சேர்த்து வதக்கவும். பின்னர் வடித்த சாதத்தை இதனுடன் சேர்த்துக் கிளறி இறக்கவும். சுவையான பூசணி சாதம் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஒரு தலைவன்; 5 தலைவிகள்; இது மான்களின் வாழ்க்கை

Discovery CHANNEL



“மான்கள் குழுவாக வாழும் காட்டுயிர்கள். ஒரு குழுவில் 15இலிருந்து 30 மான்கள் வரைக்கும் இருக்கும். மான்களைப் பொறுத்தவரைக்கும் ஆண் மான்தான் குழுவைத் தலைமை தாங்கி வழிநடத்தும்.

தன் குழுவில் இருக்கும் பெண் மான்களுக்கும் மான்குட்டிகளுக்கும் ஏதாவது ஆபத்து வந்தால் எச்சரிப்பது ஆண் மான்கள்தான். மற்ற காட்டுயிர்களுக்கு எங்கே உணவு கிடைக்கும் என்பதே நோக்கமாக இருக்கும். ஆனால், மான்களை பொறுத்தவரை எந்தப் பாதுகாப்பான இடத்தில் உணவு கிடைக்கும், எந்தப் பாதுகாப்பான இடத்தில் தண்ணீர் கிடைக்கும் என்பதுதான் நோக்கமாக இருக்கும்.

மான்கள் பசியாறி நிழலுக்கு ஒதுங்கும் மரங்கள்கூட அவற்றுக்கு பாதுகாப்பான இடமாக இருக்குமா என்பதை உறுதியாக சொல்லமுடியாது. தன் குழுவில் இருக்கிற பெண் மான்களின் பாதுகாப்புக்கும் மான் குட்டிகளின் பாதுகாப்புக்கும் குழுவின் தலைவனான ஆண் மானே பொறுப்பு. அதனால், எங்கு புல் மேய்வது, எங்கு நீர் அருந்துவது, எங்கு நிழலுக்கு ஒதுங்குவது என்பதையெல்லாம் ஆண் மானே முடிவு செய்யும். ஒரு மான் தலைவனுடன் நான்கைந்து தலைவிகள் இருக்கும்.

புள்ளிமான்களை பொறுத்தவரைக்கும் வருடத்துக்கு ஒரு முறை கொம்பு விழுந்து முளைக்கும். ஒவ்வொரு வருடமும் தலைவன் மான், தான் பலமான ஆண் மான் என்று நிரூபிக்க வேண்டி வரும். ஏனென்றால், ஒரு மான் கூட்டத்தை கைப்பற்றி அதன் தலைவனாக வருடந்தோறும் ஆண் மான்களுக்குள் போராட்டம் நிகழ்ந்துகொண்டே இருக்கும்.

தன்னுடைய குடும்பத்தை கைப்பற்ற வரும் வேறொரு ஆண் மானை சண்டையில் ஜெயிக்க சகலவித போராட்டங்களையும் கையெடுக்கும் தலைவன் மான்.

காடுகளில் மான்கள் கூட்டமாக ஓர் இடத்தில் இருந்தால், அதற்கு அருகாமையில் மயில்கள் கண்டிப்பாக இருக்கும். இதற்கு என்ன காரணம் தெரியுமா? மான்களின் குளம்படிகள்பட்டு மண்ணுக்குள் இருக்கிற புழு பூச்சிகள் எல்லாம் வெளியில் வரும். அவற்றையெல்லாம் மயில்கள் சாப்பிட்டு விடும். இதற்கு நன்றிக்கடனாகத்தான், மரங்கள் மேல் உட்கார்ந்திருக்கிற மயில்கள், வேட்டையாடி விலங்குகள் தூரத்தில் வரும்போதே ஒலி எழுப்பி மான்களை எச்சரித்து விடும். உடனே மான்கள் எச்சரிக்கையாகி விடும். அல்லது அங்கிருந்து ஓடிவிடும்.

மான்கள் தாங்கள் வாழ்ந்து வருகிற குறிப்பிட்ட எல்லைகளைத் தாண்டி வெகுதூரம் எல்லாம் பயணம் செய்வதில்லை. அதனால், வறட்சியான காலங்களில் மான்களின் வாழ்க்கை துயரம் நிரம்பியதுதான். மிச்சம் மீதம் இருக்கிற புல்லும் நீரும்தான் மான்களுடைய உயிரைக் காக்கும்.

மான்களின் காதலை சங்க இலக்கியங்கள் புகழ்ந்துகொண்டிருக்கின்றன. அதில் கொஞ்சம் உண்மையும் இருக்கிறது. கொஞ்சம் புனைவும் இருக்கிறது.

வறட்சியான காலகட்டங்களில் ஓர் ஆண் மான் தன்னுடைய தலைவிகளையும் மான்குட்டிகளையும் வழி நடத்திக்கொண்டு போகும்போது, நீர்நிலைகளைக் கண்டால் முதலில் மான் குட்டிகளை நீர் அருந்த விடும். குட்டிகள் அருந்தியதும் பெண் மான்களை நீர் அருந்த விடும். கடைசியாகத்தான் ஆண் மான்கள் பருகும். மற்றபடி, சங்க இலக்கியங்களில் இருக்கிற புனைவுகள்போல, ஆண் குடிக்கட்டும் என்று பெண் மானும், பெண் மான் குடிக்கட்டும் என்று ஆண் மானும் நீர் அருந்துவதுபோல நடிக்கவெல்லாம் செய்யாது.

பெரும்பாலும் பெண் மான்கள் ஒரு கர்ப்பத்தில் ஒரு குட்டிதான் ஈனும். இந்த நேரத்தில் மான் கூட்டம் கர்ப்பிணி மானை சூழ்ந்துக் கொண்டிருக்கும். அந்தப் பெண் மானை விட்டு அவை எங்கும் நகராது. பிறந்த ஒன்றிரண்டு மணி நேரங்களில் மான் குட்டி எழுந்து நடந்து, தாய்மானின் வாசனையை அறிந்து அதனிடம் பால் குடிக்க ஆரம்பித்துவிடும். இதன் பிறகுதான் அந்த மான் கூட்டம் அடுத்த இடத்துக்கு புல்லும் நீரும் தேடி நடக்க ஆரம்பிக்கும்.

புதிதாக பிறந்த குட்டி அம்மாவின் கால்களின் நடுவில் நடந்து வரும். தலைவன் மானும் மற்ற மான்களும், புதிதாகப் பிறந்த குட்டி மான் ஒன்று தங்கள் கூட்டத்துக்குள் இருப்பது வெளியில் தெரியாமல் இருப்பதற்காக பிரசவித்த மானையும் அதன் குட்டியையும் மறைத்தபடி நடக்கும். பெண் மான்கள் குட்டி ஈனும் வாடையை செந்நாய்கள், நரிகள், கழுதைப் புலிகள் மோப்பம் பிடித்துவிட்டால் அதை வேட்டையாட வந்துவிடும்.

குட்டிமான்கள் பிறந்த 10 முதல் 15 நாட்களில் துள்ளி குதித்து ஓட ஆரம்பிக்கும். இதன் பிறகு அதனுடைய ஆயுள் அதனுடைய கால்களின் வேகத்தில்தான் இருக்கிறது.

புள்ளிமான்களின் கொம்புகள் வருடத்துக்கு ஒருமுறை உதிர்ந்து விழும் அல்லவா...? அந்த கொம்புகளும் வீணாய் போவதில்லை. மான் கொம்புகளையும் வேட்டையாடப்பட்ட காட்டு விலங்குகளின் குளம்புகளையும் முள்ளம்பன்றிகள் சாப்பிட்டு விடும்.

ஏனென்றால், முள்ளம் பன்றிகளுக்கு உடல் முழுக்க முட்களாக இருப்பதால் அவற்றுக்கு கல்சியம் சத்து அதிகம் தேவை.

அதற்காக, அவை உதிர்ந்த மான் கொம்புகளையும் உயிர் விட்ட விலங்குகளின் எலும்புகளையும் குளம்புகளையும் உண்டு தங்கள் உடலில் சுண்ணாம்பு சத்தை அதிகரித்துக்கொள்ளும்.

## தெளிவே என் சிந்தனையுள்... 34

தொடக்கம் நன்றாக இருந்தால் அன்றைய நாள் மிகவும் புத்துணர்ச்சியாக இருக்கும்.

அதிகாலையில் எவ்வளவு புத்துணர்ச்சியுடன் எழுகின்றோம் என்பதிலேயே அன்றைய நாள் தங்கியிருக்கிறது என்பதைப் பலர் அறிந்திருப்பதில்லை.

அதிகாலை புத்துணர்ச்சியுடன் எழுந்தால் வீட்டில் உள்ளவர்களுடன் அன்பாய் பேசும் சந்தர்ப்பத்தைத் தரும். நெருக்கீடின்றி காலைக் கடன்களை முடித்து ஆலயம் சென்று வணங்கி, எந்தவித அவசரமும் இன்றி வீதியில் நிதானமாகச் சென்று அலுவலக வேலையைத் தொடங்கினால், அன்றைய நாள் மிகவும் உச்சமானதாய் மாறிவிடும்.

இதுவே அன்று நீங்கள் கண்விழிக்கும் நேரம் 5.30 ஐக் கடந்துவிட்டால், வீட்டில் எவருடனும் சிரித்துப் பேசும் நிலை இராது, காலைக் கடனிலிருந்து குளிப்பது, அலுவலகத்திற்குப் புறப்படுவது வரை அவசரம் அவசரம்.

இந்த அவசரத்தில் நீங்கள் ஆலயம் செல்வதை மறந்தே விடுவீர்கள். காலை 8.30இற்கு அலுவலகம் சென்று விரல் அடையாளம் வைத்து விட வேண்டும் என்ற சிந்தனையில் நிதானம் மறந்து செல்வீர்கள்.

அன்றைய உங்கள் அலுவலக நாள் துன்பம் மிக்கதாகவே இருக்கும்.

இதுவே விபத்துக்கள் ஏற்படக் காரணமாகின்றது.

**அன்பானவர்களே!**

“பதறும் காரியம் சிதறும்” என்ற முன்னோர்களின் வாக்கியத்தை மறந்துவிடக் கூடாது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம்: படித்தால் மட்டும் போதுமா
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடகர்கள்: பி.பி.ஸ்ரீனிவாஸ், டி.எம்.சௌந்தரராஜன்
வரிகள்: கண்ணதாசன்



பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்ல வேண்டுமா

நடமாடும் மேகம் நவநாகரீகம்
அலங்காரக் கன்னம் அலை போல மின்னும்
நடமாடும் செல்வம் பணிவான தெய்வம்
பழங்கால சின்னம் உயிராக மின்னும்

துள்ளி வரும் வெள்ளி நிலா
துள்ளி வரும் வெள்ளி நிலா
துவண்டு விழும் கொடியிடையாள்
துவண்டு விழும் கொடியிடையாள்
விண்ணோடு விளையாடும்
பெண் அந்த பெண்ணல்லவோ
சென்றேன் அங்கே கண்டேன் வந்தேன்

பெண் ஒன்று கண்டேன் பொன் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

நான் பார்த்த பெண்ணை நீ பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்கவில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்கவில்லை

உன் பார்வை போலே என் பார்வை இல்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை

என் விழியில் நீ இருந்தாய்
என் விழியில் நீ இருந்தாய்
உன் விழியில் நான் இருந்தேன்
உன் வடிவில் நான் இருந்தேன்

நீயின்றி நான் இல்லை
நானின்றி நீ இல்லையே
சென்றேன் கண்டேன் வந்தேன்

பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
ஏன்னென்று நான் சொல்ல வேண்டுமா

பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்ல வேண்டுமா

# மறைந்து போகும் யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கம்

யாழ். குடா நாடானது பாரம்பரியத்துக்கும், பண்பாட்டுக்கும் சிறந்த உதாரணமாக பல ஆண்டுகள் மரபைக் கொண்டது. இங்கு பண்பாடு , கலாசாரம் போன்றவற்றையும் தாண்டி உணவுப் பாரம்பரியமும் சிறந்து விளங்குகிறது. யாழ்ப்பாணம் என்று சொன்னாலே இப்போது ஞாபகம் வருவது "புட்டு வையன ஆச்சி புட்டுச்சட்டியில " என்ற நம்மவர் பாடல் தான் .

வரகு, பயறு, கம்பு, உழுந்து, என எண்ணற்ற தானிய வகைகளைக் கொண்ட தானியங்களின் கிடங்காக யாழ்ப்பாணம் காணப்படுகிறது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததால் அவர்களின் உணவுப் பழக்கமும் அதற்கு ஏற்றாற்போல் காணப்பட்டது. முன்பெல்லாம் காலையில் எழுந்தால் சிறுதானிய உணவுகள் தான் சாப்பிடுவார்கள் இன்று வரை வயதானவர்கள் ஆரோக்கியமாக இருப்பதற்கு அவர்களின் உணவுப் பழக்கவழக்கமே காரணம். அவர்களுக்கு எளிதில் நோய்களும் நெருங்குவதில்லை. அரிசி, கீரை வகைகள், காய்கறிகள், பருப்பு, மீன், புளி, தேங்காய், கருவேப்பிலை, மிளகாய், மஞ்சள் போன்ற இயற்கைச் சேர்மங்களை உள்ளடக்கியே உணவுப்பழக்கம் காணப்பட்டது. ஆனால் தற்போது இந்த உணவுப்பழக்கவழக்கமும் மேலைநாட்டு ஆதிக்கத்தால் மாற்றமடைந்து வருகிறது. இப்போதெல்லாம் தெருவுக்கு தெரு துரித உணவுக் கடைகள் மிதமிஞ்சி வந்து விட்டன.

காலையில் எழுந்து சத்தான உணவு சமைத்து சாப்பிடும் மரபு மாற்றமடைந்து கடைகளில் வாங்கி உண்ணும் மரபு உட்புகுந்து விட்டது. கிழமையில் ஒருநாளாவது பீட்சா, Kfc, பாஸ்தா சாப்பிடுவது வழக்கமாகிவிட்டது. எமது பாரம்பரிய உணவுகளை இனி கண்காட்சிகளில் தான் பார்க்க வேண்டும் என்றதொரு நிலை எதிர்காலத்தில் உருவாகினாலும் ஆச்சரியமில்லை. துரித உணவுக் கடைகளில் Offer என்றால் மக்கள் கூட்டம் கரைபுரளும் ஆனால் இதே உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள், உணவுகள் எவ்வளவு மலிவாக விற்றாலும் அங்கு வாங்குவதற்கு ஆட்களே இருப்பதில்லை. இவ்வாறானதொரு நிலை தொடர்ந்தால் எம் நாட்டை பன்னாட்டு நிறுவனங்கள் ஆக்கிரமிக்கும் இதனால் எதிர்கால சந்ததியினரிற்கு எம் பாரம்பரிய உணவுகளே மறக்கடிக்கப்படும்.

அத்தோடு, உடனடி உணவுகளுக்குப் பின்னால் ஆபத்தும் நிறைந்துள்ளது. அதிகளவில் இதனை உட்கொள்வதால் உடலில் தேவையற்ற கொழுப்பு அதிகரிக்கும் இதனால் , மாரடைப்பு, இருதய நோய், நீரிழிவு, போன்ற நோய்களும் . உடற்பருமன் அதிகரிப்பும் ஏற்படும் . இக்காலத்தில் சிறுவயதில் சிறுமிகள் பூப்படைவதற்கும் விஞ்ஞான ரீதியில் இத் துரித உணவுப் பழக்கமும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

பண்பாட்டு உணவானது இயற்கை உட்சேர்ப்புக்கள், வீட்டுத் தயாரிப்பு , பாரம்பரிய முறையில் சமைக்கப்படுவதால் உடலுக்கு பக்கவிளைவு , தீங்கின்றி காணப்படுகிறது. இதனால்தான் ஆரம்பகால மக்கள் நோய் நொடியின்றி காலாதிகாலம் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால் துரித உணவுகள் அதிக எண்ணெய், அதிகளவு உப்பு சேர்ப்பு, நீண்டகாலம் பாவித்த எண்ணெயை மீள மீள பாவித்தல், சுகாதாரக் குறைபாடு போன்ற வற்றினால் மக்களுக்கு எளிதில் நோயைப் பரப்புவதாகக் காணப்படுகின்றன. இதனால் சுவை அதிகம் ஆனால் சத்துக் காணப்படாது. இவற்றை உண்பதால் ஊட்டச்சத்து குறைபாடே ஏற்படும்.

இதனால் மக்களிடையே பாரம்பரிய உணவுப் பழக்கம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிக முக்கியமான விடயமாகக் காணப்படுகிறது. எமது பாரம்பரியத்தில் பலவற்றை இழந்து வரும் எமக்கு இவ்வாறான விடயங்களையேனும் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரிடம் ஒப்படைக்க வேண்டியது எமது கடமையாகும். இல்லாவிட்டால் அந்நியர்கள் எமது நாட்டைச் சொந்தம் கொண்டாடி பல விடயங்களை அழித்தது போன்று எதிர்காலத்தில் எமது பாரம்பரியங்களையும் நாம் முற்றாக இழக்க நேரிடும்.

- பானுஷா நிமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லவே இல்ல... சி-னி-மா

## கானா வினோத்



**பி**க்பாஸ் முதல் சீசனிலிருந்து கடந்த ஆண்டு சீசன் வரை, நிகழ்ச்சி முடிந்த பின் நடக்கும் கொண்டாட்டங்களில் போட்டியாளர்களைக் கலாய்த்துப் பாட்டு வருமே...! அதையெல்லாம் எழுதியது இந்த சீசனில் போட்டியாளராகச் சென்றிருக்கும் கானா வினோத் தானாம்.

**கா**னா பாட்டு எழுதுவதுடன் கிட்டார், கீபோர்ட், தபேலா, மெலோடிகா என விதவிதமான இன்ஸ்ட்ரூமென்ட்களும் வாசிக்கும் திறமை பெற்றவர் இவர். போக்குவரத்து விழிப்புணர்வு போன்ற பொதுவிடயங்கள் என்றால் சம்பளம் வாங்க மறுத்துவிடுவாராம்.



**சிவகார்த்திகேயன்,** அடுத்து வெங்கட் பிரபுவின் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். அதற்கான முழு ஸ்கிரிப்டையும் கேட்டுத் திருப்தி அடைந்துவிட்டார் சிவா.

ஆனால், முதல்முறையாக படத்திற்கு இசை அனிருத் என்கிறார்கள். வழக்கமாக வெங்கட் பிரபு, யுவன் ஷங்கர் ராஜா கூட்டணியில்தான் இணைவார்.

இந்த முறை அனிருத்துடன் கைகோர்த்திருக்கிறாராம்.



**"டியூட்"** படத்தை அடுத்து, மமிதா பைஜுக்கு "இரண்டு வானம்" ரெடியாகி வருகிறது.

விஷ்ணு விஷால் நடித்துள்ள இந்தப் படத்தை "ராட்சசன்" ராம்குமார் இயக்கியுள்ளார். "ராட்சசன் போலவே இந்தப் படமும் எனக்கு ரொம்ப ஸ்பெஷலான படமாக இருக்கும். பெப்ரவரியில் திரைக்குக் கொண்டுவரப் போறோம்" என்கிறார் விஷ்ணு விஷால்.



**இவ்வாண்டின்** தொடக்கத்தில் வெளியாகி வெற்றிப் படமாகப் பெயரெடுத்தது சுந்தர்.சி-யின் "மதகஜராஜா." அதன் ஹீரோ விஷாலுக்கும் கம்பேக் என்ட்ரியைக் கொடுத்திருந்தது. இந்த நிலையில், சுந்தர்.சியும் விஷாலும் மீண்டும் ஒன்றிணைகிறார்கள். இப்போது, "மூக்குத்தி அம்மன் 2"-ஐ இயக்கி வரும் சுந்தர்.சி, அதை முடித்துவிட்டு விஷாலை இயக்குகிறார். விஷாலும், இப்போது நடித்து வரும் "மகுடம்" படத்தை அதற்குள் முடித்துக் கொடுத்துவிடுவார் என்கிறார்கள்.



**'96' படத்தின்** இரண்டாம் பகுதிக்கான கதையை விஜய் சேதுபதியிடம் சொல்லிவிட்டாராம் இயக்குநர் பிரேம் குமார். அதில் சில திருத்தங்கள் செய்ய சேதுபதி சொல்லியதால், கொஞ்சம் கால அவகாசம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இதற்கிடையே பகத் பாசிலுடன் களமிறங்கிவிட்டார் பிரேம் குமார். "மெய்யழகன்" படத்தில்தான் நடிக்க முடியாமல் கால்ஷீட் பிரச்சினை குறுக்கிட்டதை நினைத்து விஜய் சேதுபதி இன்னமும் வருந்துகிறாராம்.



**மலையாளத்தைப்** போலவே தமிழிலும் கவனம் செலுத்தி வருகிறார் நிவின் பாலி. இங்கே ராம் இயக்கத்தில் "ஏழுகடல் ஏழுமலை" படத்தில் சூரியுடன் இணைந்து நடித்துள்ளார்.

அதை அடுத்து லோகேஷ் கனகராஜ் தயாரிப்பில் ராகவா லாரன்ஸ் நடிக்கும் "பென்ஸ்" படத்தில் வில்லனாகிறார்.

தவிர, நயன்தாராவுடன்தான் சேர்ந்து நடித்திருக்கும் "டியர் ஸ்டூடண்ட்ஸ்" படத்தைத் தயாரித்திருப்பதோடு தமிழிலும் அதைக் கொண்டு வருகிறார் நிவின்.

# சின்னத்திரை டைரி

## ஷாலினி








**பூர்வீகம்**

பிறந்தது சேலம். படித்தது கோயம்புத்தூர். நடிப்பது சென்னை.

**கல்யாணம் ஆகிடுச்சாமே?**

ஆமாம். இந்த இடத்தில் ஒரு இண்ட்ரஸ்டிங்கான விடயம். பிரபுவுக்கும் சொந்த ஊர் சேலம். ஆனால் கோயம்புத்தூரில்தான் மீட் பண்ணினேன். இப்ப நாங்கள் இரண்டு பேரும் வாழ்வது கோயம்புத்தூர். நான் இன்றைக்கு இந்த ஃபீல்டில இருப்பதற்கு காரணமே அவர்தான். எங்களோடது காதல் நிச்சயிக்கப்பட்ட திருமணம்.

**முதல் ரி.வி என்ட்ரி**

"கதாநாயகி" ரியாலிட்டி ஷோ. அதில் பத்துக்கு பத்து மார்க் எடுத்து கே.எஸ். ரவிக்குமார் சார், ராதிகா மேடம் இரண்டு பேரிடமும் பாராட்டு வாங்கினேன். அந்த நிகழ்ச்சியின் ஒரு ரவுண்டில "பருத்தி வீரன்" பிரியாமணி மேடம் மாதிரி நடித்தேன். அந்த வீடியோ பார்த்துவிட்டு அவர்களே பாராட்டினார்கள்!

**நடிப்பு தாண்டி, பிடித்தது**

டான்ஸ், நீச்சல், பாட்டு கேட்பது, படம் பார்க்கிறது... இதெல்லாம்.

**பாண்டியன் ஸ்டோர்ஸ்**

கூட நடிக்கின்ற அத்தனை பேரும் சீனியர் ஆர்ட்டிஸ்ட். ஆனால் எங்களிடம் எந்த வித்தியாசமும் பார்க்காமல் பழகுகிறார்கள். சொல்லித் தருகிறார்கள். பிடித்த ஒரு விடயமா நடிப்பைத் தேர்ந்தெடுக்கக் காரணமே இந்த சீரியல்தான். அதனால் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பெயர் "பாண்டியன் ஸ்டோர்ஸ்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



## யாரோட போன் இது?



நானும் என் நண்பனும் உணவகத்தில் உணவுக்கு ஓடர் செய்து விட்டு காத்திருந்தோம். அப்போது அருகில் ஒருவர் ஃபோனில் பேசிகொண்டு இருந்தார். ஸ்பீக்கர் ஆனில். இருந்ததால் மறுமுனையில் பேசிய அவர் மனைவியின் குரல் தெளிவாகக் கேட்டது.

"ஏங்க. நான் இப்ப ஷாப்பிங் மால் உள்ளே இருக்கிறேன். நான் சொன்னேனே டிஜிற்றல் கமரா. இங்கே இருக்குங்க. இருபதாயிரம்தான் விலை வாங்கட்டுமா" வாங்கிக்கோ"

அப்புறம்... நான் கேட்டேனே ஒரு வைர நெக்லஸ். அதுவும் இங்கே இருக்கிறது. விலை தான் ஒன்றரை இலட்சம் சொல்கிறான். "ஒன்றரை இலட்சம்தானே உனக்குப் பிடித்திருந்தால் வாங்கிக்கோ. அப்புறம் ஒரு புடவை பார்த்தேன். அதிக விலை சொல்கிறான். விலையை பார்க்காதே உனக்கு பிடித்திருந்தால் வாங்கிக்கோமா" ஏங்க... அப்புறம் நாம் பார்த்தமே ஒரு கார். இப்ப ஆஃபர் போட்டு இருக்கிறார்கள். விலை பதினெட்டு இலட்சம் சொல்லுறான். உங்கட செக் இருக்கு கொடுத்துவிடவா?"

"ஓகேமா... இது எல்லாம் கேட்கலாமா உனக்கு பிடித்திருந்தால் போதும்" ஓகேங்க. சீக்கிரம் வீட்டுக்கு வாங்க" என்று கொஞ்சலாய்ச் சொல்லி விட்டு மறுமுனையில் ஃபோனை வைத்தாள் மனைவி. இவரும் ஃபோனைச்சிரித்தபடியே வைத்து விட்டுத்திரும்பினார். ஒரே நாளில் இவ்வளவு பர்ச்சேஸா நாங்கள் மிரண்டு போய்ப் பார்த்து கொண்டிருக்க, எங்களைப் பார்த்து சிரித்தபடியே கேட்டாரே ஒரு கேள்வி "யாரோட மொபைலுங்க இது.?"

## உண்மையான நட்பு



போர்க்களத்தில் இரண்டு நண்பர்கள் களத்தில் இருந்தனர்.

எதிரிகள் சுற்றி வளைத்து சுடும்போது ஒருவன் மட்டும் குண்டடிபட்டு விழுந்து கிடந்தான்.

நான் என் நண்பனை எப்படியாவது தூக்கி வர எனக்கு உத்தரவு கொடுங்கள் கமாண்டர் என்றான். மறைந்து இருந்து தாக்குவது தான் சரியான வழி. நீ அங்கு போவதால் உன் உயிருக்கு தான் ஆபத்து என்றார் கமாண்டர்.

நீ போவது என்றால் போ. ஆனால் நீ போவதால் எதுவும் நடந்துவிடப்போவதில்லை என்று கமாண்டர் சொன்னார். அதையும் மீறி தன் நண்பனை காப்பாற்ற ஓடினான்.

அவனை தோளில் தூக்கி கொண்டு வரும்போது எதிரிகள் சுட்டனர். இவனுக்கும் அடிபட்டது. அதையும் மீறி அவனைத் தூக்கிக் கொண்டு வந்தான். கமாண்டர் அவனை பரிசோதித்துப் பார்த்தார் அவன் நண்பன் இறந்துபோய் இருந்தான். நான் அப்பொழுதே சொன்னேன் நீ அவனை காப்பாற்றப் போவதால் எந்த உபயோகமும் இல்லை இப்போது பார் நீயும் அடிப்பட்டு கிடக்கிறாய் என்றார்.

நான் போனது தான் சார் சரி என்றான். என்ன சொல்கிறாய் உன் நண்பன் இறந்து கிடந்தான் நீ சொல்வது எப்படி சரியாகும் என்று கேட்டார் கமாண்டர்.

நான் அங்கு போகும்போது என் நண்பன் உயிருடன்தான் சார் இருந்தான் என்னை காப்பாற்ற நீ வருவாய் என்று எனக்கு தெரியும் நண்பா" என்று சொல்லிவிட்டுதான் சார் இறந்தான் அந்த ஒரு வார்த்தை எனக்கு போதும் சார் இந்த காயம் எல்லாம் எனக்கு ஒரு பொருட்டே இல்லை.

## செருக்குகள் ஏனோ



ஆறறிவுடையோர்
அறிந்திலரோ
ஐந்தறிவுடை
ஆ... கன்றிழந்து
அரசு மணியடித்து
அறம் கேட்டதை!
செம்மணி பூமியில்
செருக்கு மிகக்கொண்டு
சிதைத்துடல்களை
சீரழித்தனரே
ஆன்ம மணி ஓசை
மறந்து...
அவனி உங்களுக்கு
அழியா ஆயுளை
தந்ததோ?
ஆயுத அழிப்பிற்காய்?
நீதியின் நியாயங்களை
நிராகரிக்கும் நீங்கள்
இனவாதத்தை
அங்கீகரிக்கும்
செருக்குகள் ஏனோ?

**தமிழினியன்,**
**கலாபூஷணம் பரந்தாமன்,**
**வவுனியா**

## கவிதைக் கலசம்




## அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


## உயிர்மையின் உரிமை

அன்பே என்பது அமைதி தரும்
ஆசை என்பது பகையை வளர்க்கும்
இனிமை வாழ்வே என்றும் சுகம்
ஈகம் ஒன்றே நிறைவின் வளம்
உண்மை என்பது உயர்வின் படி
ஊக்கம் என்றும் ஆற்றல் தரும்

எண்ணித் துணியின் இடர்கள் விலகும்
ஏற்றம் காண்பது மனிதம் அளிக்கும்
ஒருமை பகையை அழித்து ஒழிக்கும்
ஓங்காரம் புரிந்திடின் அகங்காரம் அழியும்
அஃகம் நிறையின் அகிலம் செழிக்கும்
ஒவ்வாமை என்பது உடலின் கேடு

கடமை என்பது கண்ணியம் உடையது
காதல் கொள்வது உயிர்மையின் உரிமை
கிளர்ச்சி செய்வது கீழ்மையின் செயலே
கீழ்மை செய்பவர் மேன்மை அடையார்
குயிலின் இனிமை குருவோடு அமையும்
கூடிப் பிரிவது கேட்டில் முடியும்

**வளவை வளவன்**

## மறைவுகள்

இலைமறை காயாக
இருந்ததெல்லாம் இப்பொழுது
தொடுதிரையில் "அப்பட்டமாக"
மறைந்து கிடக்கிறது...?



## துரோகமும் துயரும்



முதுகில் குத்தும்
துரோகங்களை - விட
அவ்வளவு பெரிதாய்
ஒன்றும் வலித்து விட
போவதில்லை
துரத்தும்
துயரங்கள்...!!!

**கருவாச்சி,**
**ஈரோடு - தமிழ்நாடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ். கோட்டை

75

## செங்கை ஆழியான்

நெல்மூடைகள் கிழிக்கப்பட்டு சிந்தப்பட்டிருந்தன. புத்தகங்கள் பரவலாக வீசப்பட்டிருந்தன. வீடுகளில் தொங்கிய பெண்பிள்ளைகளின் படங்களில் குங்குமத்தால் திலகம் இடப்பட்டிருந்தது. பராசக்தி வித்தியாசாலை இருந்த இடம் தெரியாமல் புல்டோசரால் தகர்த்து நீக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல், பள்ளப்பலம், வேலணை ஆகிய இடங்களில் முதல் மூன்று நாட்களில் மாத்திரம் 60 இற்கு மேற்பட்டோர் இராணுவத்தின் நடவடிக்கைகளால் கொலையுண்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் ஆங்காங்கு காணப்பட்டன. சில வைக்கோலிட்டு எரிக்கப்பட்டிருந்தன.

பலர் வெட்டுக் காயங்களுக்குள்ளாகினர் வேலணை மேற்கில் செ. செவ்வந்திநாதன், அவரது மனைவி சொருபா, மகன் அம்பிகாபதி ஆகியோர் பொம்பர் தாக்குதலினால் மரணமானார்கள். நாரந்தனையில் செ. பாலன், எஸ். மணவன், பே. சிவகுமார். பி. அன்ரனி ஆகியோர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இப்பகுதியில் மா. வசந்தகுமார், ச. அமுதலிங்கம், எஸ். கிருஸ்ணபிள்ளை ஆகியோரும் கொலையுண்டவர்களாவர். காரைநகரில் கைகள் கட்டப்பட்ட நிலையில் ஒரு வயோதிபர் ஆறு நாட்களின் பின்னர் மீட்கப்பட்டார்.

ஒப்பறேசன் போர்ட் என்ற இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஜெனரல் கொப்பேகடுவ தலைமை தாங்கினார்.

இவற்றிற்கு மத்தியில் மண்டைதீவில் நிலைகொண்ட இராணுவம் யாழ் கோட்டையை நோக்கி நகர்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்தது.

யாழ்ப்பாண நகரப்பகுதிக்கு மேலாக வலம் வந்த "வை 12-விமானம் காலை 5 மணிக்கே பீப்பாக் குண்டுகளை வீசத் தொடங்கியது. சிறிது நேரத்தில் மண்டைதீவிலிருந்து யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி நகரவிருந்த இராணுவத்திற்கு உதவியாகப் புலிகளின் நிலை எனக் கருதிய இடங்களில் கண்மூடித்தனமாகக் குண்டுகளை வீசியது.

இரண்டு கடற்படைப் பீரங்கிப் படகுகள் மண்டை தீவிற்குக் கிழக்குக் கரையில், சிறு தீவிற்கு அருகில் தயார் நிலையில் நிறுத்தப்பட்டிருந்தன. கோட்டைக் கரையை நோக்கி அவை குண்டுகளைக் கக்கத் தயார் நிலையில் இருந்தன.

காலை 5.55 மணி. கோட்டையின் காவலரண்கள், கொத்தளங்கள் என்பனவற்றிலிருந்து புலிகளின் காவல் அரண்களை நோக்கித் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் ஆரம்பமாகியது. (தொடரும்)

# பேய்த் திட்டம்




168

## கடற்புறா

"இருக்கலாம் இருந்தால் நாம் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது" என்று பலவர்மன் கூறினான். வில்வலனை உற்று நோக்கி. "அதற்கு என்ன செய்ய வேண்டும்?" இளைய பல்லவன் கோட்டையின் காவற் படையையோ மக்கள் படையையோ நடத்தா திருக்கச் செய்ய வேண்டும்."எப்படிச் செய்வது?" அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நாளை இரவு நீ தாக்குதலைத் துவங்கிவிடு!"

"இளையபல்லவன்" என் அறையிலிருப்பான் - பிணமாக." என்று கூறிய பல வர்மன் அந்தக் காரிருளில் மெல்ல நகைத்தான்.அந்தப் பயங்கரச் சிரிப்பு மெல்ல இருந்தாலும் பேய்ச் சிரிப்பாக இருந்தது. அந்த விநாடியில் பேயும் வகுக்க அஞ்சும் கொடிய திட்டத்தை வகுத்துவிட்டான் பலவர்மன்.

### புது வாழ்வு

மாளிகைத் தோட்டத்தின் மரத்து நிழலில் வில்வலனைச் சந்தித்து. மறுநாளிரவு நகரத்தின்மீது தாக்குதலைத் துவங்கிவிடும்படி உத்தரவிட்டு, இளையபல்லவன் உயிரையும், அதே அமாவாசை இரவில் ஒழித்துக் கட்டத் திட்டமிட்டு, மீண்டும் தன் அறையை நாடிய பின்பும் பலவர்மன் சிந்தையில் ஏதோ விவரிக்க இயலாத சந்தேகமும் பயமும் ஊடுருவி நின்றன.

காட்டுப் பகுதியில் கோட்டைக் காவலைப் பலவீனப்படுத்தியும் கடற் பகுதியில் காவலே இல்லாமலே அடித்தும் இளையபல்லவன் தன் திட்டங்களுக்கு அனுகூலமாகவே சகலவிதத்திலும் காரியங்களைச் செய்திருந்தும், அந்தக் காரியங்களைக் கண்டு தன்மனம் மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக ஏன் பயத்தின் வசப்படுகிறது என்று தன்னைத் தானே பலவர்மன் பலமுறை கேட்டுக்கொண்டான்.

தன் மஞ்சத்தில் உட்கார்ந்த வண்ணமே நகரக் காவலையும் பாதுகாப்பையும் குலைத்து இளைய பல்லவன் இட்ட விபரீதமான உத்தரவுகள் குடிவெறியில் இடப் பட்ட உத்தரவுகளாகையால் அவை விபரீதமாயிருந்ததில் வியப்பு ஏதுமில்லையென்றாலும், அந்த உத்தரவுகளையும் போரில் வல்ல அமீரும், கண்டியத்தேவனும் எதற்காகச் சிரமேல் ஏற்று நிறைவேற்றுகிறார்கள் என்பது மட்டும் பலவர்மனுக்குச் சிறிதும் புரியவேயில்லை. போர்களின் சரித்திரத்தைப் பார்க்கும்போது படைத்தலைவர்கள் தவறான உத்தரவுகளைப் பிறப்பித்த சமயங்களில் எல்லாம் உப தலைவர்களும், வீரர்களும் புரட்சி செய்திருப்பதே வழக்கமாயிருந்திருக்க, இளையபல்லவன் விடயத்தில் மட்டும் அந்தச் சரித்திரம் மாறுபடக் காரணமென்ன வென்று பலமுறை யோசித்த பலவர்மன் விடையேதும் காணாமல் தவித்தான்.

இளையபல்லவன் எந்த முட்டாள் தனமான உத்தரவைப் பிறப்பித்தாலும் அதை மற்றவர்கள் நிறைவேற்றுவது அவனிடத்திலுள்ள பயத்தினாலா பக்தியினாலா என்பதை அலசிப் பார்த்தும் ஏதும் புலப்படாமற் போகவே மீண்டும் மீண்டும் சஞ்சலத்துக்கு உள்ளாகி அன்றிரவைத் தூங்காமலே கழித்தான் பலவர்மன்.

அப்படிப் பல கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் சஞ்சலத்துக்கும் இலக்கானதால் மறுநாள் விடிந்த அமாவாசைப் பொழுது பலவர்மனுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்குப் பதில் பெரும் மலைப்பையே கொடுத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'
# சுகமான விடியல்
469
வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நஞ்சு அன்று கொல்லும். சோடா நின்று கொல்லும்

“அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்” என்பதன் உண்மையை நாம் எம் முன்னோர்களிடமிருந்தும், அனுபவரீதியாகவும் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால், நஞ்சு அன்று கொல்லும். சோடா நின்று கொல்லும் என்ற விடயம் எம்மில் பலருக்குத் தெரியாது. சோடா சக்தி தரும் ஓர் ஆரோக்கிய பானம் என்று நம்பி ஏமாந்து கொண்டிருக்கின்றோம்.

பெருகிவரும் சோடா குடிக்கும் பழக்கம் சுகாதாரத்துறைக்குப் பெரும் சவாலாக உருவெடுத்திருக்கிறது. இதன் காரணமாகப் பல சுகதேகிகள் இளம் வயதிலேயே பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு ஆளாகிவருகிறார்கள்.

சோடா குடிப்பதால் முக்கியமாகப் பற்சிதைவும், பல் சம்பந்தமான நோய்களும், எலும்பு பலவீனமடைதலும், மூட்டு சம்பந்தமான நோய்களும், உடல் நிறை அதிகரிப்பு, சலரோகம், குருதியில் PH மட்டத்தில் ஏற்படும் மாறுபாடுகள், குருதி அமுக்க நோய், குருதியில் கொழுப்பின் அளவு அதிகரித்தல், இருதய நோய்கள், ஒஸ்ரியோ போரோசிஸ் போன்ற நோய்களும் ஏற்படும்.

இவ்வாறான ஆபத்தான பானங்கள் திருமண வீடுகளிலும் பொது நிகழ்வுகளிலும் ஏன் நோயாளர்களுக்குக்கூட பரிமாறப்பட்டு வருகின்றன என்பது ஒரு வேதனையான விடயமாகும். இளம் வயதிலேயே பலருக்கு நீரிழிவு நோய், கொலஸ்ரோல் அதிகரிப்பு, நிறை அதிகரிப்பு போன்றவை ஏற்படுவதற்கு அதிகரித்த சோடாப் பாவனை ஒரு முக்கியமான காரணமாக விளங்குகின்றது.

அற்புதமான உணவுகளான முட்டையையும் பாலையும் குடிக்கப் பயப்படும் நம்மவர்களுக்கு ஆபத்தான சோடா வகைகளை போத்தல் போத்தலாக வாங்கிக் குடிக்கும் துணிவு எங்கிருந்து வந்தது? அனைவரும் சுகமாக இருக்கவேண்டும் என்ற சிந்தனை உள்ள எமக்கு பிறருக்கு சோடா கொடுக்க எப்படி மனம் வந்தது? வேலைச் சுகத்துக்காகச் சோடாவைக் கொடுத்து உடற் சுகத்தைக் கெடுத்துக் கொள்வதா? எங்கும் எதற்கும் சோடா கொடுக்கும் பழக்கத்தைப் பார்க்கும்போது “வை திஸ் கொலைவெறி” என்னும் பாடல்தான் ஞாபகம் வருகிறது.



நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, முழுவியளம் பார்த்து, சகுனம் பார்த்து, மங்களகரமாகச் செய்யும் சுபகாரியங்களுக்கும் கூட இந்த ஆபத்தான சோடா வகைகளைப் பரிமாறும் பாரம்பரியம் எங்கிருந்து வந்தது. சோடா குடிக்க வேண்டாம் என்று சொன்னால் “அப்போ தாகத்துக்கு எதைக் குடிப்பது?” என்று கேட்பவர்களுக்கு பதிலாக எதைச் சொல்வது? எம் சந்ததியின் சுகத்துக்காக நாம் சிந்திக்கவேண்டி இருக்கிறது.

காலம் காலமாக நாம் பாவித்துவந்த இயற்கையான பாதுகாப்பான குடிபான வகைகளை நாம் மீண்டும் பாவிக்க முயலுவோம். நின்று கொல்லும் பானமான சோடாவைக் குடிப்பதையும் கொடுப்பதையும் நிறுத்துவோம். இயற்கையான பானங்களான பழரசம், இளநீர், தேசிக்காய்த் தண்ணீர், மழைநீர், மோர், குத்தரிசிக்கஞ்சி, வீட்டிலே தயாரித்த கூழ், சுட்டு ஆறிய நீர், பால், சீனி சேர்க்காத தேநீர், தோடம் பழத்தண்ணீர், ரசம், குடிநீர், சூப் போன்ற பானங்களை அருந்துவது சிறந்தது.

அதிகளவு சீனிச் சத்தும் இரசாயனப் பதார்த்தங்களும் சுவையூட்டிகளும் நிறமூட்டிகளும் சேர்க்கப்பட்டு பல்வேறு வகையான விளம்பரங்களுடன் விற்பனையாகும் சோடா வகைகளிடம் நாம் ஏமாறப்போகிறோமா? வருத்தத்தை விலை கொடுத்து வாங்கப்போகிறோமா? இளம் வயதில் எமது பிள்ளைகளை நீரிழிவு நோயாளியாகப் பார்க்க ஆசைப்படுகிறோமா? எலும்பு, மூட்டு நோய்களுக்கு ஆளாகி நோவால் அவதிப் படப் போகிறோமா? சோடாவை வாங்கும் முன் இவற்றைச் சிந்திப்போம்.

அமங்கல பானமான சோடாவை மங்களகர்மான நிகழ்வுகளிற் பரிமாறுவதை நிறுத்துவோம். பொது நிகழ்வுகளில் சுலபமாகப் பரிமாறக்கூடிய ஆரோக்கியமான பானங்களைத் தயாரிக்கும் முயற்சியில் இறங்குவோம்.

**Dr சி.சிவன்சுதன்**
**வைத்திய நிபுணர்,**
**யாழ். போதனா வைத்தியசாலை**

# முட்டை பற்றிய சில உண்மைகள்

விலை குறைந்த அதியுச்ச ஊட்டச்சத்துள்ள உணவு. முட்டை உண்பதால் குருதி கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்க மாட்டாது.

பசியைக் கட்டுப்படுத்தும் வல்லமை முட்டைக்கு அதிகமாக இருப்பதால் ஒருவரின் நிறைகுறைப்பு முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்.

ஆரோக்கியமான ஒவ்வொருவரும் தினமும் ஒரு முட்டை உண்டு வருவது அவரின் ஆரோக்கியத்தைப் பேண உதவும். முட்டையை அரை அவியலாகவோ பச்சையாகவோ உண்பதை தவிர்த்து விடவேண்டும்.



முட்டை மஞ்சட்கருவில் நிரம்பாத கொழுப்பமிலமும் அன்டி ஒக்சிடன்களும் பல கனியுப்புக்களும் அடங்கியுள்ளதால் உடலுக்கு ஆரோக்கியமானது. எனவே இதனை தவிர்த்து விடவேண்டிய அவசியமில்லை. காடை முட்டைகளில் கோழி முட்டைகளிலும் பார்க்க ஊட்டச்சத்துக்களின் செறிவு அதிக மாகும்.

தாரா முட்டைகளும் உடல் நலத்திற்கு ஆரோக்கியமானது. முட்டைகளை சேமித்து வைக்கும் பொழுது அதன் கூரான பகுதி கீழ்நோக்கி இருக்கும் படி வைத்தால் அவை பழுதடையும் வீதம் குறைவாக இருக்கும்.

அறை வெப்பநிலையில் முட்டைகளை 7 நாட்களுக்கு சேமித்து வைக்கமுடியும்.

கோழி முட்டை ஒன்றின் சராசரி சக்திப்பெறுமானம் 70 k.cal ஆகும்.

**சி.சிவன்சுதன்,பொது வைத்திய நிபுணர்,யாழ்.போதனா வைத்தியசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி

(முன்பதிவு செய்து வரவும்)

(5620)

## வேலை ஆட்கள் தேவை

கௌதாரிமுனை, பூநகரி கடற்கரை உல்லாச விடுதி கட்டுமானப் பணிகளுக்கு வேலையாட்கள் தேவை. தங்குமிட வசதி வழங்கப்படும். சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு

**077 171 4086**

(1687)

## A/L PHYSICS CLASS

தனிப்பட்ட, குழு வகுப்புகளும், வீடு வந்தும் கற்பிக்கப்படும்.

**Ranjit Sir**

**(B.Sc, P.G.D.E, SLPS I)**

தொடர்புகளுக்கு

**077 600 4896**

(5776)

## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதிலுடன் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

Sivasakthy Palan (Jeeva)

**077 474 3499**

(1682)

## வேலைவாய்ப்பு

எமது வெளியீட்டு நிறுவனத்திற்கு

- கனனி தட்டெழுத்தாளர்
- வடிவமைப்பாளர்
- புத்தகம் கட்டுனர்

தேவை. EPF + திறமைக்கான கொடுப்பனவு வழங்கப்படும்.

**0777 111 212**

(5787)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு வாகன சேவிஸ் வேலை செய்யத் தெரிந்தவர்களும் வாகனம் ஓடத் தெரிந்தவர்களும் தேவைப்படுகின்றார்கள். தொடர்பு கொள்ளவும்.

- திறமைக்கேற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

**077 760 6814, 074 175 9214**

(5791)

## UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY

MINISTRY OF EDUCATION, HIGHER EDUCATION AND VOCATIONAL EDUCATION

**VACANCIES**

Applications are invited from qualified persons for the below mentioned posts in University College of Jaffna

- LECTURER (PROBATIONARY) / SENIOR LECTURER GRADE II/I IN COSMETOLOGY / PRODUCTION TECHNOLOGY / HOSPITALITY MANAGEMENT
- DEMONSTRATOR IN BUILDING SERVICES TECHNOLOGY / COSMETOLOGY / FARM MACHINERY TECHNOLOGY
- INSTURCTOR IN IT
- ASSISTANT BURSAR
- SECURITY OFFICER

**Closing Date: 01.12.2025**

FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7791

02.11.2025

Assistant Registrar
University College of Jaffna

(C-4235)

*The 72nd Annual Festival of Carols*

*by the*

***Combined Choirs of Schools and Colleges of the North***

*will be held at the St. John's College Hall*

*on Saturday 08th November 2025*

*at 4.00 p.m.*

*Admission: By Hymn Sheet - Rs.50/=*

(C-4233)

## மணமகள் தேவை

1995, இந்து. திருவோணம், DOCTOR

பூர்வீகம் -மந்திகை, வதியுமிடம் -யாழ்ப்பாணம்

மணமகன் பதிவு இல: 10259.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை.

அழையுங்கள் 076 664 9401

www.EQMarriageService.com

(C-327)

## மணமகன் தேவை

1996, இந்து. பூரட்டாதி , DOCTOR

பூர்வீகம் - பருத்தித்துறை, வதியுமிடம் - உடுப்பிட்டி

மணமகள் பதிவு இல: 11388.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

இணையவழி திருமணசேவை.

அழையுங்கள் 076 664 9401

www.EQMarriageService.com

(C-327)

## தேவை

மின் இணைப்பாளர், மின் இணைப்பு உதவியாளர் தேவை. 3000-3500 வரை சம்பளம் + OT Fire line Technician மற்றும் Fire line உதவியாளர் உடனடியாகத் தேவை

தொடர்புகளுக்கு

**075 711 4770**

(C-328)

## வேலைவாய்ப்பு

வத்தளை எலகந்தையிலுள்ள முன்னணி நிறுவனமான RG BROTHERS (PVT) LTD இல் கீழ் குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கு ஆட்கள் உடனடி தேவை.

வயது எல்லை 20-40 இற்கு உட்பட்ட ஆண்கள்.

தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

- மேற்பார்வையாளர் (Supervisor)
- இயந்திர இயக்குநர் (Machine Operator)
- களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)
- சாரதி (Drivers)
- மூடை தூக்கும் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் (Laborers)

தொடர்புகளுக்கு

**RG Brothers, No: 228, Canel Road, Elakanda Hendala Wattala.**

**077 434 6367**

(174)


# கரீபியன் நாடுகளை புரட்டிப்போட்ட மெலிசா புயல்

## 49 பேர் உயிரிழப்பு



ஹைட்டியில் நதியின் கரைகள் நிரம்பி வழிந்ததால், ஆயிரக்கணக்கான மக்கள் 120 இற்கும் மேற்பட்ட தங்குமிடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

புயல் தற்போது பெர்முடா நோக்கி நகர்ந்து வருகிறது.

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவுக் கூட்டமைப்பு நாடுகள் கரீபியன் தீவு நாடுகள் என அழைக்கப்படுகின்றன. இதில் கியூபா, ஹைதி, ஜமைக்கா, டொமினிக்கன் குடியரசு உட்பட 13 நாடுகள் உள்ளன.

இந்நிலையில் கரீபியன் தீவுகளைத் தாக்கிய சக்தி வாய்ந்த மெலிசா புயலால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மெலிசா புயல் ஹைட்டி மற்றும் ஜமைக்காவைத் தாக்கியதைத் தொடர்ந்து, அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஹைட்டியில் குறைந்தது 30 பேரும், ஜமைக்காவில் குறைந்தது 19 பேரும் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உதவி சென்று சேர்ப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. சில பகுதிகளில் பல நாட்களாக குடிநீர் இல்லாமல் தவிக்கின்றனர், உணவுப் பற்றாக்குறையும் நிலவுகிறது. ஹைட்டியில் நதியின் கரைகள் நிரம்பி வழிந்ததால், ஆயிரக்கணக்கான மக்கள் 120 இற்கும் மேற்பட்ட தங்குமிடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

ஜமைக்காவின் சில கிராமங்களில் அனைத்து கட்டடங்களும் சூறாவளியால் அழிக்கப்பட்டதை செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன.

புயலால் 52 பில்லியன் டொலர்கள் அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் கியூபாவிலும் புயல் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள நிலையில் இதுவரை உயிரிழப்பு ஏதும் பதிவாகவில்லை. மெலிசா புயல் தற்போது பெர்முடா நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2025

## மன வருத்தம் நீங்கும்!



**கிரகநிலை** – சுக ஸ்தானத்தில் குரு - பஞ்சம ஸ்தானத்தில் கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன் - சப்தம ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் - லாப ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் மன வருத்தம் நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம். தேவை. பணத் தேவை ஏற்பட்டாலும் அதைத் திறமையாகச் சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகப் பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவச் செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது.

பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டு பிடிப்பது நன்மை தரும். பெண்களுக்கு மற்றவர்களால் ஏற்படும் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயற்படுவது நல்லது.

மாணவர்களுக்கு கல்வியில் மெத்தனப் போக்கு காணப்படும். மிகவும் கவனமாகப் படிப்பது கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**அஸ்வினி:** இந்த மாதம் ஒரு குறிக்கோளை மனதில் வைத்து துணிவுடன் செயலாற்றுவீர்கள். உங்கள் பேச்சுத் திறமை அதிகரித்து அதனால் பல காரியங்கள் சிறப்பாக நடந்து முடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் அவர்களால் உதவி ஆகியவையும் கிடைக்கலாம்.

நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். பகைகள் விலகும்.




**பரணி:** இந்த மாதம் தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

கடன் பிரச்சினைகள் தொல்லை தராது. போட்டிகள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். உழைப்புக்கு பலன் கிடைக்கும். உங்கள் மீதான மதிப்பு உயரும். சக தொழிலாளர்களிடம் நிதானத்தை கடைபிடிப்பது நன்மை தரும்.

கோபத்தை குறைத்து தன்மையாக பேசுவதால் காரிய வெற்றி உண்டாகும். எதிர்பாராத செலவு இருக்கும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள், எதிர்ப்புகள் தீரும். கணவன், மனைவிக்கு இடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் உங்களுக்கு பெருமை உண்டாகும்.

பெண்கள் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் இருக்கும். தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

**பரிகாரம்:** ஆதிபராசக்தி அன்னையை வணங்குவது மூலம் நன்மை உண்டாகும்

**சந்திராஷ்டம தினங்கள்:**
20, 21, 22

**அதிஷ்ட தினங்கள்:**
03, 04, 30

## செலவுக்கேற்ப வரவும் இருக்கும்!



**கிரகநிலை**- தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு - சுகஸ்தானத்தில் கேது - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் சனி (வ), ராகு என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ் நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத் தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயற்படுவது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகி விடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம்.

பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். உறவினர்களிடம் கவனம் தேவை. பெண்களுக்கு மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்கள் கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதறவிடலாம். வாகனங்களில் செல்லும் போதும் எச்சரிக்கையாக செல்வது நல்லது.

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. எல்லா வகையிலும் நன்மை உண்டாகும்.




மற்றவர்களுக்கு உதவிகள் செய்ய தூண்டும். பிரிந்து சென்றவர்களை மீண்டும் சந்திக்க நேரலாம். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறவும், மேல் படிப்பு படிக்கவும் எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.

**ரோகிணி:** இந்த மாதம் எடுத்த காரியத்தை தைரியமாக உறுதியுடன் செயற்படுத்துவீர்கள். வாழ்க்கைக்கு தேவையான புதிய வசதிகள் கிடைக்கும். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். புதிய ஆடை அணிகலன்கள் - ஆடம்பரப் பொருட்கள் வாங்குவீர்கள். வீடு, மனை வாங்க திட்டமிடுவீர்கள். சிலர் புதிய வாகனம் வாங்குவார்கள். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்குப் பின் நடைபெறும்.

**மிருகசிரீடம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். ஆனால் பழைய பாக்கிகளை வசூலிப்பதற்கு அலைய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். அதே நேரத்தில் பணிகளை செய்து முடிக்க தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும். தேவையற்ற வார்த்தைகளை தவிர்ப்பது நன்மை தரும்.

**பரிகாரம்:** ஆண்டாள் தாயாரை வணங்குவது நன்மை தரும்

**சந்திராஷ்டம தினங்கள்:**
23, 24

**அதிஷ்ட தினங்கள்:**
05, 06

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மக்களாட்சி மலர வேண்டுமாயின் மனிதன் சிந்திக்க வேண்டும். - சோக்ரட்டீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அபராதம் செலுத்துவதில் நாமே முதலிடத்தில்

நமது நாட்டில் எந்த மாகாணத்தில் இருந்து அதிகளவு தண்டப்பணமும் அபராதப் பணமும் அரசாங்கத்துக்குக் கிடைக்கப் பெறுகிறது என ஆராய்ந்தால், அதன் முடிவு எங்கள் வட மாகாணம் என்பதாகவே இருக்கும்.

ஆம், வீதிக் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸார் எந்த வாகனத்தை மறித்தாலும் அதற்குத் தண்டம் விதித்து தடக்கொல எழுது கின்ற அளவிலேயே நிலைமை உள்ளது.

அவ்வாறு இடைமறித்த வாகனத்துக்கு தண்டம் எழுதப்படவில்லை என்றால், அங்கு பேரம் பேசுகின்ற சமரச முயற்சி நடந்தாகிறது என்பது பொருள்.

இத்தகைய நிலைமை எதற்காக? என்று நாம் எண்ணுவதுண்டு. இங்குதான் எங்கள் ஒவ்வொருவரிடமும் காணப்படுகின்ற பொறுப் பற்ற தன்மை தெரியவருகிறது.

உண்மை. வாகனங்களை வீதியில் செலுத் தும்போது, எம்மிடம் இருக்க வேண்டிய ஆவ ணங்கள் மற்றும் பத்திரங்கள் இருக்கின்ற னவா என நாம் ஒருபோதும் பார்ப்பதில்லை.

வாகனத்தில் ஏறி அதை வேகமாகச் செலுத் தினால் போதும் என்பதுதான் நம் மனநிலை யாக உள்ளது.

அதிலும் பலருக்கு 3ஆம் நபர் காப்புறுதி, வரி அனுமதிப்பத்திரம் என்பன காலாவதியாகி விட்டதென்பதைப் பொலிஸாரே கூறவேண்டி யுள்ளது.

அந்தளவுக்கு வாகனம் சார்ந்த அனுமதிப் பத்திரங்களை நாம் சரிபார்ப்பதில்லை.

இதனால் நாள்தோறும் தண்டப்பணம் செலுத்துகின்றோம். அல்லது பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுத்து அதிலிருந்து விலகிக் கொள்கிறோம்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதாவது, பகல் பொழுது முழுவதும் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட ஒரு வர்; மூவாயிரம் அல்லது மூவாயிரத்து ஐந் நூறு ரூபாவை அன்றைய வேதனமாகப் பெற் றுக் கொண்டு நம்பிக்கையோடு செக்கல் பொழுதில் வீடு செல்கின்றார்.

இந்த வேளையில் போக்குவரத்துப் பொலி ஸார் அவரை இடைமறித்து ஆவணங்களைப் பரிசோதிக்கும்போது, 3ஆம் நபர் காப்புறுதிப் பத்திரம் காலாவதியாகிவிட்டது எனக் கண்ட றிந்தால் நிலைமை எப்படியாகும்.

அந்தோ! இரண்டாயிரம் ரூபாயை பொலி ஸாருக்கு இலஞ்சமாகக் கொடுத்துவிட்டு வீடு செல்வதென்றால், அது யார் விட்ட தவறு என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

ஆம், பருத்தித்துறைப் பகுதியில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தியவர்கள் நீதிமன்றில் தமது குற் றத்தை ஒப்புக் கொண்டனர்.

நீதிமன்றம் அவர்களுக்கு தலா ஒரு இலட் சத்து ஆறாயிரம் ரூபாயைத் தண்டமாக விதித்தது.

என்ன செய்வது ஒருவருக்கு ஒரு மூவா யிரம் ரூபாயைக் கொடுத்து, நாம் இருக்கின்ற இடங்களைச் சுத்தம் செய்தால் ஏன் இந்த அவலம்.

ஆக, டெங்கு நுளம்புப் பெருக்கம் தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றம் விதித்த தண்டத்தை தயவு செய்து அனைவரும் ஒரு நல்ல பாடமாக எடுத்துக் கொண்டு நாம் வாழுமிடத்தை தூய்மையாக வைத்திருப்போமாக.

## 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பிற்காக துப்பாக்கி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பாரா ளுமன்றில் அங்கம் வகிக் கும் சுமார் 20 உறுப்பினர் கள் பாதுகாப்பிற்காகத் துப்பாக்கிகளை வழங்கு மாறு கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

தனிப்பட்ட பாதுகாப் புக்காகத் துப்பாக்கி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கை கள் பாராளுமன்றம் மற் றும் பாதுகாப்புப் படை யினரின் தொடர்புடைய அதிகாரிகளிடம் சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக வும் பின்னர் இந்தக் கோரிக்கைகள் பாது காப்பு அமைச்சின் பரி சீலனைக்காக அனுப்பப் பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகின்றது.

அண்மையில் பாரா ளுமன்ற உறுப்பினர்க ளின் பாதுகாப்பு குறித்து பொலிஸ் மா அதிபர் பங் கேற்ற சிறப்புக் கலந் துரையாடல் ஒன்று நடை பெற்றது.

அந்தக் கலந்துரையா டலுக்குப் பின் சபாநாய கர் மற்றும் பொலிஸ்மா அதிபர் இணைந்து, பாராளுமன்ற உறுப்பி னர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக் கைகள் எடுக்கப்படும் என இணங்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 4 ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின் உ/த பரீட்சைக் கருத்தரங்குகளுக்குத் தடை

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக் கான க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான மேலதிக வகுப்புக்கள், கருத்தரங் குகள் என்பன 4 ஆம் திகதி நள்ளிரவுக்கு பின் னர் நடாத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள் ளது.

பரீட்சைகள் திணைக் களம் இந்த அறிவிப் பினை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் களை ஏற்றுக்கொள்ளா தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்றும் பரீட் சைகள் முடியும் வரை இந்த தடை நடைமுறை யில் இருக்கும் என்றும் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீ ட்சை நவம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம் பர் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கல்விப் பொதுத் தரா தர உயர்தரப் பரீட்சை நாடு முழுவதும் ஆயி ரத்து 665 மையங்களில் நடைபெறும் என குறிப் பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, 2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சை அடுத்த ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதி முதல் பெப்ரவரி 26ஆம் திகதி வரை நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக் கது. (ம-7)

## அரச வருமானம் அதிகரிப்பு

இந்த ஆண்டின் முதல் அரையாண்டில் அன்பளிப்புகள் நீங்கலாக அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2,321.7 பில்லி யன் ரூபாவாக அதிகரித் துள்ளதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அண் மைய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் படி, 2024 ஆம் ஆண் டின் இதே காலப்பகுதி யில் 1,860.6 பில்லியனாக இருந்த அரச வருமானம் 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் 24.8% அதிகரித்து 2,321.7 பில்லியன் ரூபாவை எட் டியுள்ளது. (ம-7)

### கொடிகாமம் வரணியில்

## சட்டவிரோத மணலுடன் பயணித்த பட்டா வாகனம் கைப்பற்றல்

தென்மராட்சி கொடி காமப் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட வரணி வடக் குப் பகுதியில் சட்ட விரோத மணலுடன் பய ணித்த பட்டா ரக வாக னத்தை நேற்றுக் காலை கொடிகாமப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வடமாராட்சி குடத்த னைப் பகுதியில் பட்டா ரக வாகனமொன்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து ஏற்றிய பின் னர் வரணி மாசேரி வீதி யால் பயணித்துக் கொண் டிருந்த பட்டா ரக வாக னத்தை மாசேரிப் பகுதி யில் கொடிகாமப் பொலி ஸார் இடைமறித்துள்ள னர்.

எனினும் குறித்த பட்டா ரக வாகனம் பொலிஸாரை மோதும் வகையில் பயணித்து தப் பியோடியுள்ளது.

இந்த நிலையில் பொலிஸார் பட்டா ரக வாகனத்தைத் துரத்திச் சென்று பருத்தித்துறை- கொடிகாமம் வீதியில் கறுக்காய்த்தீவுப் பகுதி யில் வைத்து முள்ளுக் கட்டையை வீதியின் குறுக்காக போட்டுத் தடு த்து நிறுத்தியுள்ளனர்.

இதன் போது இலக் கத் தகடுகளற்ற பட்டா ரக வாகனத்தை கைவிட்டு மணல் கடத்தற்காரர் கள் அறுவர் தப்பியோடி யுள்ளனர்.

சட்டவிரோதமாக அக ழப்பட்ட மணலை இலக் கத் தகடுகளற்ற பட்டா ரக வாகனத்துடன் கொடி காமப் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர். (ம-7,60)

### ஐப்பசி பரணியை முன்னிட்டு

## வீரகத்திப் பிள்ளையாருக்கு விஷேட அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஐப்பசி பரணியை முன்னிட்டு யாழ். வண் வடகிழக்கு கலட்டி வீர கத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் எதிர் வரும் புதன்கிழமை காலை 10.00 மணியள வில் அபிஷேகம், மூல மூர்த்தி பூஜை, வைரவப் பெருமானுக்கு விசேட பூசை நடைபெறும் என பிரதமகுரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக் கள் அறிவித்துள்ளார். (ம-7)

## ருமேனியாவில் வேலை வழங்குவதாகக் கூறி

### சுமார் 7 கோடி ரூபா மோசடி

ருமேனியாவில் வேலைவாய்ப்பு வழங்கு வதாகக்கூறி சுமார் 7 கோடி ரூபாவுக்கும் அதிக மான பணத்தை மோசடி செய்த மஹரகமையில் இயங்கி வந்த வெளி நாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் பணிப்பாளர் ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் (31) நுகே கொடைப் பிரதான நீத வான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்க நீதிமன் றம் உத்தரவிட்டது.

குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரி வுக்கு 400க்கும் அதிக மான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நிதி குற்றப் புலனாய் வுப்பிரிவு-1 மேற்கொண்ட விசாரணைகளின் போது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற் கும் இது குறித்து 117 முறைப்பாடுகள் கிடைத் துள்ளமை தெரியவந் துள்ளது.

விசாரணைகளின் படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர்பார்த்து வந்த நபர்களிடமிருந்து குறித்த முகவர் நிலை யம் 850,000 ரூபா முதல் 1,850,000 ரூபா வரை யான தொகையை வசூ லித்துள்ளமை தெரியவந் துள்ளது. (ம-7)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01 - 30, 2025

'நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.'



வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இ.போ.சபை பேருந்து சேவை தொடர்பில்

# வவுனியாசாலை உதவி முகாமையாளருக்கும் ஜெகதீஸ்வரன் எம்.பிக்குமிடையே கடும் தர்க்கம்

(வவுனியா)

வவுனியாவின் சில கிராமங்களுக்கு இ.போ. சபை பேருந்தின் சேவை சீரின்மை தொடர்பில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனுக்கும், இ.போ. சபை வவுனியா சாலை உதவி முகாமையாளருக்கும் இடையே கடும் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போதே இந்த தர்க்க நிலை ஏற்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியாவின் கூமாங்குளம், கள்ளிக்குளம், கந்தபுரம், வேலங்குளம் உள்ளிட்ட பல கிராமங்களுக்கு இ.போ. சபையின் பேருந்து சேவை சீராக இடம்பெறுவதில்லை எனவும், இதனால் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் பாதிக்கப்படுவதாகவும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ் வரனால் கேள்வி எழுப்பப் பட்டது.

இதற்குப் பதில் அளித்த இ.போ.சபை வவுனியா சாலை உதவி முகாமையாளர், எமக்கு சாரதிகள், காப்பாளர்கள் பற்றாக்குறை உள்ளது. எங்களால் முழுந்தளவு நாம் செயற்படுகின்றோம். இல்லாதவிடத்து நடத்துங்கள் என்றால் எம்மால் எப்படி செயற்பட முடியும். நீங்களே எமக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்தப் பேருந்து ஏன் வரவில்லை என கேட்கிறீர்கள். எங்களது இடத்தில் இருந்து பார்த்தால் எங்கள் நிலை தெரியும். விபத்து நடந்தால் நான் அந்த இடத்திற்குப் போக வேண்டும். அப்போது பேருந்தை அனுப்பச் சொன்னால் நான் எப்படி அனுப்புவது எனத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட ம.ஜெகதீஸ்வரன் எம்.பி, அரச அதிகாரிகள் கதைக்கும் போது தெளிவாகக் கதைக்க வேண்டும். மக்கள் பிரதிநிதி ஒருவர் தனது தனிப்பட்ட பிரச்சினைகளை கதைக்கவில்லை. மக்களது பிரச்சினையைத்தான் கதைக்கிறார்.

உங்கள் வேலையை விட்டுப் போங்கள், நான் இருந்து பார்க்கிறேன், என்ன கதைக்கிறீர்கள், கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கவும். மக்களது முறைப்பாடு வரும் போது உங்களிடம் தான் கேட்க முடியும். வீதியால் செல்பவனிடம் கேட்க முடியுமா, இது உங்களது கடமை, கேட்ட கேள்விக்கு பதில் வழங்குங்கள், சரியான முறையில் பதில் அளிக்க பழகிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க, தெரிவிக்கையில், மக்கள் வரிப்பணத்தில் தான் உத்தியோகத்தர்கள் சம்பளம் பெறுகிறார்கள், எங்களுக்கு தேவைப்பாடுகள் இருக்கிறது, மக்களது தேவைகள், அபிவிருத்தி தொடர்பில் இங்கு தான் கதைக்க முடியும். இதில் அமைதியாகவும், பொறுமையாகவும் கதைக்க வேண்டும். புத்திசாதுரியகமாக நடக்க வேண்டும். நாங்கள் உங்களை வரவேற்கின்றோம்.

இ.போ.சபைக்கு திறைசேரியில் இருந்து பெருமளவான பணத்தை ஒதுக்கீடு செய்கின்றோம். வவுனியா சாலை நட்டத்தில் இயங்குகின்றது. மக்கள் வரிப்பணத்தில் வவுனியா சாலைக்கும் பெருமளவு பணம் சம்பளத்திற்காக வழங்குகின்றோம். சங்கமாக கதைப்பதாக இருந்தால் வெளியில் வந்து அப்படி கதைக்க வேண்டும். இங்கு உள்ள பற்றாக்குறை தொடர்பில் எமக்கும் தெரியும்.

அது தொடர்பில் கதைப்பதானால் வெளியில் தான் கதைக்க வேண்டும். மக்களுக்கான சேவைக்காக தான் நிதி ஒதுக்கீடு செய்கின்றோம். அதற்கான சேவையை உரிய கால அட்டவணைப் படி நீங்கள் செயற்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (8-250)

## ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

கனடாவில் வாழும் யாழ் முஸ்லிம் சமூகத்தினருக்கும் யாழ் மண்ணில் வாழ்ந்து வரும் உறவுகளுக்கும் இடையிலான நட்புறவையும் ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்தும் முகமாக யாழ் ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோருக்கு அப்துல் கபூர் ஞாபகார்த்த விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (3)




யாழ்.பருத்தித்துறை மாலைசந்தை விநாயகர் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள 750 வழித்தடப் பேருந்து நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நினைவாக அவரது மகன் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் கண்ணன் நிதிப் பங்களிப்பில் குறித்த நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்- மகாலிங்கம்)



பூநகரி பிரதேச சபையின் இரணைதீவு பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு விழிப்புணர்வுப் பேரணியும் முத்தொளி இதழ் 5 வெளியீடும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் இரணைதீவு உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சிவபாதசுந்தரம் சபேசன் தலைமையில் நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)

# இராசிபலன்

02.11.2025
ஐப்பசி 16, ஞாயிற்றுக்கிழமை
துவாதசி பின்னிரவு 1.55 மணி வரை

பூரட்டாதி பிற்பகல் 2.08 மணிவரை
சுப நேரம் 9.04-10.34 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்
மகம்,பூரம்.

வளவன்

**மேஷம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**கடகம்** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய் தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**சிம்மம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், நட்பொன்று பகையாகலாம்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கும்பம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**கன்னி** குதூகலம் தரும் பயணமொன்று ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது .நல்லது திட்டமிட்ட காரிய மொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

அனுபவித்து அனுபவித்துப் புத்தியைப் பெறுவதற்கு ஆண்டுகள் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தியோகபூர்வ...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கொழும்பு 7 இல் (சுதந்திர அவன்யூ) அமைந்துள்ள தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் இருந்து எதிர்வரும் சில நாட்களில் வெளியேறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் தமது சில உடைமைகளை அந்த வீட்டில் இருந்து தற்போது வெளியேற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்களை நீக்கும் சட்டமூலம் கடந்த செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டதையடுத்து முன்னாள் ஜனாதிபதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் வெளியேறுவதற்கு கால அவகாசம் கோரியிருந்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவருக்கு வழங்கப்பட்ட இல்லத்தில் இருந்து விரைவில் வெளியேறவுள்ளார். (ம-7)

## நீதிமன்றம்...

ளுக்கு முன்னர் நால்வர் ஹெரோயினுடன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

பின்னர் பிரதான சந்தேகநபரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய பொலிஸார் அனுமதி கோரிய நிலையில் மன்றும் அதற்கு அனுமதி வழங்கியது.

தடுப்புக்காவல் விசாரணையின் பின்னர் குறித்த சந்தேகநபரை நேற்று மல்லாகம் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றவேளை சந்தேகநபர் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தப்பிச்சென்ற சந்தேகநபரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ம-7,104)

## பல்வேறு...

செம்மணிப் மனிதப் புதைகுழி உட்பட யாழில் பல்வேறு விடயங்களுக்கு நீதிகோரி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சமவுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகரப் பகுதியில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணிப் புதைகுழி விவகாரம், பயங்கரவாத தடைச் சட்ட விவகாரம், பட்டலந்தை வதை முகாம் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோரது விவகாரம், ஏனைய புதைகுழி விவகாரம் போன்றவற்றுக்கு உடனடி விசாரணைகளையும் நீதியையும் வேண்டி இந்தப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பி, "அனைத்து காணாமல் ஆக்கல்களுக்கும் இப்போதாவது நீதியை வழக்கு, செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் உண்மையை வெளிப்படுத்து, மீண்டும் மீண்டும் அடக்குமுறைகள் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனே நீக்கு, அனைத்து தேசிய இனங்களுக்குமான உரிமையை உறுதிசெய்" என்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் பௌத்த மதகுருக்கள், சமவுரிமை இயக்கத்தினர், வசந்த முதலிகே, சிங்கள மக்கள், தமிழ் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,104)

## சட்டம் ஒழுங்கை...

வகையில் நிறைவேற்றப்படாமையினால் நாட்டில் போதைப்பொருள் கலாசாரம் மேலோங்கியுள்ளது.

அரசாங்கம் கூறும் வகையில் பாதாள உலகக் குழுக்களை முற்றாக ஒழித்து போதைப்பொருள் மற்றும் துப்பாக்கிச் சூடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

அச்சமின்றி மக்களுக்கு சேவை செய்ய மக்கள் பிரதிநிதிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

இந்த அரசாங்கத்தில் அதை செய்ய முடியாது போயுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும்போது, அவர்கள் வீடு திரும்புவார்களா? இல்லையா? என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லா நிலை காணப்படுகின்றன.

துப்பாக்கிச் சூடு நடத்தப்படுமா? அல்லது கொலை நடக்குமா? என்பது குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது.

இந்நாட்டு மக்கள் இன்று சமூகப் பாதுகாப்பைக் கூட இழந்துவிட்டனர்.

தேசிய பாதுகாப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அரசாங்கத்தின் திறமையின்மையால் முழு நாட்டிலும் அச்சமும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழ் - முஸ்லிம்...

ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாட்டில் இடம்பெற்றது.

வடக்கில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 35 வருட நிறைவை நினைவுகூரும் முகமாக குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மீண்டும் தமது பிரதேசங்களில் மீள் குடியேற்றப்பட வேண்டும். தமிழ் முஸ்லிம் மக்களிடம் நல்லதொரு உறவுப் பாலத்தை கட்டியெழுப்புவதற்கு முஸ்லிம் மக்கள் தயாராக இருக்கின்ற நிலையில் இரு தரப்பினரும் உறவை வளர்த்துக் கொள்ள இதயச் சுத்தியுடன் முன்வர வேண்டும் என்ற நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் அரசியல் ஆய்வாளர் சி.அ. யோதிலிங்கம், சமூக செயற்பாட்டாளர் செல்வின், சிரேஷ்ட சட்டத்தரணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாலுக் முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-7,33,104)

## யாழ்ப்பாணத்தில்...

நடவடிக்கையின்போது குருநகர், மணியந்தோட்டம் அரசடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து ஹெரோயின் போதைப் பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர். இவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## இயக்கச்சியில்...

தில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்த அனைவரும் பளைப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,316)

### மஹஜன சம்பத

திகதி 2025.11.01 — சீட்டிழுப்பு இலக்கம் 6000

P 3 6 9 4 5 1

அத சம்பத: P 9 4 5 1 — சீட்டிழுப்பு இலக்கம் 575

### சுப தவசக்

திகதி 2025.11.01 — சீட்டிழுப்பு இலக்கம் 198

தனுசு 01 08 49

### தன நிதானய

திகதி - 2025.11.01 — சீட்டிழுப்பு இலக்கம் - 2030

P 20 25 28 55 P

### மெகா பவர்

திகதி 01/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2348

R 03 08 41 65 68

### ஜய ஜய

திகதி 2025.11.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0268

K 7 0 2 8

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4242 — சீட்டிழுப்பு திகதி 01.11.2025

G 03 10 20 79 — G

### ஹந்தஹன

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1309

சிம்மம் 05 21 29 57 சிம்மம்

### சுபிரி வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள் — 01.11.2025 — வெற்றி வாரம் 0708

ஆங்கில எழுத்து B — மற்றும் வெற்றி இலக்கம் 3 4 8 6 6 9

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,677,629.20

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2974 — சீட்டிழுப்பு திகதி 2025.11.01 — தினம் சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 04 17 34 43 — A

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,701,516.80

### சனிதா

திகதி 01.11.2025 — வெற்றி வாரம் 5135

வெற்றி இலக்கங்கள் 26 71 72 78 — J

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,727,126.40

### சசிரி

வெற்றி வாரம் 0804 — சீட்டிழுப்பு திகதி 01.11.2025 — சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 18 32 37

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,179,440.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4686 — சீட்டிழுப்பு திகதி 01.11.2025 — தினம் சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள் 23 24 25 48 — கும்பம்

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

### லக்ன வாசனா

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்

K 01 16 28 58 67

சீட்டிழுப்பு வாரம் 2150 — 01.11.2025 சனிக்கிழமை

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.604,155,436.40

### அட கோடிபதி

சனிக்கிழமை — வெற்றி வாரம் : 2800 — சீட்டிழுப்பு திகதி : 2025.11.01

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,060,248.00

வெற்றி இலக்கங்கள் 31 32 59 60 — A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSAL SCIENCE ACADEMY

Advanced Level
**PHYSICS**
2026 Batch 1
Tamil Medium
மின்புலம்
Electric Field
Starts
**Magnetic Field**
திங்கள், செவ்வாய், புதன், வியாழன்
6.00 Pm - 7.30 pm
M.Kugan [BSc(Hons), Dip in Edu]

A/L
**CHEMISTRY**
2026 BATCH
இரசாயன இயக்கவியல்
CHEMICAL KINETICS
TAMIL AND ENGLISH MEDIUM
commences
02 NOVEMBER 2026
கடந்த கால வினாக்கள், மாதிரி வினாக்கள் முழுமையான விளக்கத்துடன் செய்து விடப்படும்.
THEORY
7.00 PM - 8.30 PM
Every Sunday, Thursday, Friday
PAPER CLASSES : 9.30 PM - 11.00 PM
EVERY SUNDAY, TUESDAY
T.SHARANGAN [B.Sc(UG)]

Zoom Classes Invite all island (Conditions Applied) (1692)
K.K.S. Road, Chunnakam - Jaffna. 077 996 6888



# அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண மண்டபம்
## (ASR WEDDING HALL)

முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

எமது வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் இனிய கிறிஸ்மஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் பிள்ளைகளின் திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழா, கிறிஸ்தவ பதிவு திருமணங்கள், மூஸ்லீம் நிக்ஹா (திருமணங்கள்) தென்னிந்திய பாடகர்களின் நிகழ்ச்சிகளை செய்ய விரும்புவோர்கள். பதிவுகளை மேற்கொள்ளலாம் மற்றும் திறமை வாய்ந்த போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர்களை ஒழுங்கு செய்து தரப்படும்.

- ◆ திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 மணி முதல் 4.30 மணிவரையும்
- ◆ சனி காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரைக்கும் மண்டபத்தை பார்வையிடலாம்.
- ◆ ஞாயிறு விடுமுறை

(5792)

இல.542, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
076 744 6064
021 222 1355



# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 193/= | Max 1Kg |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 153/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 225/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 269/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg வெள்ளைப் பச்சை(உள்நாடு) | - 210/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 205/= | |
| 1Kg தீட்டல் பச்சை ஆட்டக்காறி | - 239/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 255/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 995/= | |
| 1Kg உளுந்தம் பருப்பு | - 999/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= ~~70~~ | |

MAX 03
~~1200~~
1135




~~320~~
280

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk இனை நாடவும்.
(1691)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30



# காணி விற்பனைக்கு

1. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 30 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட இரு கடைகளும்
2. யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
3. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
4. யாழ். பலாலி வீதியில் 'அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
5. யாழ். கே.கே.எஸ் வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்
6. யாழ்.A9 வீதியில் 10 பரப்புக் காணியும், 4 பரப்புக் காணியும்
7. யாழ். நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 22 பரப்புக்காணியும்
8. யாழ். விக்டோரியா வீதியில் வீதி முகப்புடன் 16 பரப்புக் காணியும், 8 பரப்புக் காணியும்
9. யாழ். மானிப்பாய் வீதியில் ஈழநாடு பத்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும்
10. யாழ். ஒஸ்மேனியா கொலிஜ்ற்கு அண்மையில் ஒஸ்மேனியா வீதி முகப்புடன் 6 பரப்பில் அமைந்த புதிய வீடும் காணியும்

உடன் விற்பனைக்குண்டு.
(C-4237)

தொடர்பு : கனகசபை தர்மகுலசிங்கம்
இடம் : No.378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 723 2535


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சர்வேஸ்வரலலிதா கமலநாதன்

மலர்வு 27.08.1955
உதிர்வு 13.11.2024

திதி:துவாதசி

அன்பின் உருவமானீர்
அணையா விளக்கானீர்
எங்கள் நெஞ்சங்களிலே
என்றும் நிலைத்திருப்பீர்
என்றென்றும் உங்கள்
நினைவுகளுடன் நாம்....

கடந்த 13.11.2024 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் குல விளக்கின் முதலாம் ஆண்டு நினைவும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 02.11.2025 இன்று ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்

(5786)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org